# பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 115 இதழ் : 30 18-8-1989 (ஆகஸ்ட் 18 — ஆகஸ்ட் 25) ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


**இவ்வார விநியோகம் 2**

| | |
|---|---|
| மானிப்பாய் பங்கு | 200 |
| சுன்னுகம் பங்கு | 155 |
| பேசாலை பங்கு | 150 |
| ஆனைக்கோட்டை | 135 |
| மாதகல் பங்கு | 125 |
| செக்கடித்தெரு பங்கு | 120 |
| புதுக்குடியிருப்பு பங்கு | 112 |
| நாரந்தனை பங்கு | 100 |
| கிளிநொச்சி பங்கு | 100 |
| இரணைதீவு பங்கு | 100 |
| யாழ். புனிதயுவானியார் | 85 |
| மிருசுவில் பங்கு | 80 |
| அரிப்பு பங்கு | 78 |
| ருகலை பங்கு | 70 |
| மொத்தப் பிரதிகள் | 7575 |

Library

மடுப்பதியில் அண்மைக்காலத்தில் நடைபெற்ற திருவிழாக்களில் கோலாகலமான திருவிழா:

# மடுத்திருப்பதியில் ஏராளமான மக்கள்!

# தமிழ், சிங்கள மொழிகளில் வழிபாடு!

**கடந்த ஐந்து ஆண்டுகளில் நடைபெற்ற பெருவிழாக்களில் இவ்வாண்டு ஆகஸ்டு 15ஆம் திகதி நடைபெற்ற திருவிழாவுக்கு பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர். நீண்டகாலமாக எதுவித திருத்த வேலையும் செய்யப்படாமலிருந்த அன்னையின் ஆலயத்தில் தற்போது பாரிய திருத்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.**

இவ்வாண்டு ஆகஸ்டு 15 ஆம் திகதி மடுத்திருப்பதியில் நடைபெற்ற திருவிழாவுக்கு இருபத்தி ஐயாயிரத்துக்கும் அதிகமான பக்தர்கள் யாத்திரிகர்களாக வந்திருந்தனர்.

நீண்ட இடைவெளிக்குப் பின் வழிபாடுகள், அறிவித்தல்கள், பாடல்கள், செபங்கள் இரு மொழிகளிலும் நடத்தப்பட்டன. திருவிழாத்திருப்பலி, மறையுரை என்பனவும் இருமொழிகளிலும் நடைபெற்றமை சிறப்பம்சமாகும். நீர்கொழும்பு, மற்றும் வடக்கு, கிழக்கு தவிர்ந்த பகுதிகளிலிருந்து சிங்கள மக்களும் இவ்விழாவுக்கு வருகை தந்திருந்தனர்.

நாட்டின் சீரற்ற நிலைமைகள் மத்தியிலும், மடுத்திருப்பதி அமைதியான சூழலை உருவாக்கியிருந்தமை யாத்திரிகர்களை வியக்க வைத்தது.

மன்னார் பகுதியில் நிலவும் வரட்சி காரணமாக போதிய குடிநீர் வசதிசெய்யப்படவில்லை. வவுனியா, மதவாச்சி மார்க்கமான போக்குவரத்துச் சேவைகளும் சரியாக இயங்கவில்லை.

ஆலயத்தில் பாரிய திருத்த வேலைகள் நடைபெறுகின்றன. இவற்றில் பல அத்தியாவசியமானவை. கடந்த பல ஆண்டுகளாக திருவிழாக்கள் சீராக நடைபெருத காரணத்தால் போதிய நிதி வசதிகள் இல்லாமல் பரிபாலகர்கள் சிரமத்துக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

மன்னூர் மறைஆயரே நாளாந்த பராமரிப்புச்செலவுகளை செய்யவேண்டியிருக்கிறது. அத்தியாவசிய திருத்த வேலைகளுக்காகப் பணஉதவியைப் எதிர்பார்த்திருக்கின்றனர்.

## குர்னூல் மறைவட்டம் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கிறது

''மக்களுக்கு பண உதவி, பொருளுதவி அளித்தால் அது சில நாட்களுக்கே அவர்களைப் பேணமுடியும். ஆனல் அவர்களுக்கு கல்வி புகட்டினுலோ அவர்கள் தம்மைத்தாமே பேணிக் கொள்வர்,'' குர்னூல் ஆயர் மத்தேயு செரியன் குன்னல் கூறிய இந்த வார்த்தைகள் அங்கு கல்விக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது.

ஆந்திரப் பிரதேசத்தில் கத்தோலிக்க திருச்சபைக்கு செல்வாக்கு மிகக் குறைவு, ஏனெனில் முக்கியஸ்தர்களோ, பெரும் அரசியல் பிரமுகர்களோ கத்தோலிக்கரில் வெகு சிலரே.

அனைவருக்கும் கல்வியறிவூட்டுவதே ஆயர் செரியன் குன்னலின் நோக்கமாகும். பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புமாறு அவர் பெற்ருேர்களை வற்புறுத்திவருகிருர்.

ஆயினும் எல்லாப்பிள்ளைகளுக்கும் கல்வியூட்டுவதில் பல இடையூறுகள் உள்ளன. வறுமை ஒரு காரணம். அண்மையில் பாடசாலைகள் இல்லாமை மற்ருென்று. ஆகவே மூன்று விடுதிப் பாடசாலைகளை ஆயர் ஆரம்பித்துள்ளார். பெற்ருேர் விடுதிக்கு தத்தம் வசதிக்கேற்ற படி பணம் கட்டுகின்றனர்.

பாடசாலைக் குறைபாட்டை நீக்க பல ஆரம்ப பாடசாலைகள் உயர் நிலைப்பள்ளிகளாக தரமேற்றப்பட்டுள்ளன. இங்குள்ள கத்தோலிக்க பாடசாலைகள் கல்வித்தரத்திலும், ஒழுக்கத்திலும் முதன்மை பெற்று விளங்குவதாக கல்வி அதிகாரிகளின் பாராட்டைப் பெற்றுள்ளன.

## உலக சமூகத் தொடர்புத்தின கருப்பொருள் கம்பியூட்டர்

1990 ஆம் ஆண்டுக்கான உலக சமூகத் தொடர்பு தினத்துக்கான கருப்பொருளாக அருத்தந்தை ''கம்பியூட்டர் கலாச்சாரத்தில் கிறிஸ்தவ செய்தி'' என்ற தலைப்பை அறிவித்துள்ளார்.

1990 மே 27ஆம் திகதி நினைவு கூரப்படவுள்ள தினத்தில் இக்கருப்பொருளை ஆராயும்போது ' மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம்'' உணரப்பட வேண்டும் என்ருர்.

## எண்பது வயதில் குருத்துவம்

தனது 80 வயதில் சென்ற ஆண்டு ஆனி மாதம் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட வில்லியம் ஷுமச்சர் ஆறு பிள்ளைகளின் தந்தையாவர்.

பல ஆயர்கள் அவரைக் குருவாக்குவதற்கு மறுப்புத் தெரிவித்திருந்த போதிலும் அமெரிக்காவில் டல்லஸ் மறைமாவட்ட ஆயர் பேரருள் திரு தோமஸ் ஆண்டகை இவரை ஏற்று குருவாகத் திருநிலைப் படுத்தினர்.

டல்லசில் பத்திரிசியார் ஆலய உதவிப் பங்குக் குருவாகப் பணியாற்றும் இவர் அமெரிக்காவிலுள்ள மற்றைய

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்)

## 3 அருட்தந்தையர்கள் கைது

தென்கொரியாவில் மூன்று குருக்கள் அரசினுல் கைது செய்யப்பட்டுள்ளனர். தென்கொரிய தேசிய பாதுகாப்புச் சட்டம் அரச அனுமதியின்றி தென் கொரியாவைச் சேர்ந்தவர்கள் வடகொரியா செல்வதைத் தண்டனைக்குரிய குற்றமாக பிரகடனப்படுத்தியுள்ளது.

தென்கொரிய கத். மாணவர் தலைவர் சுசாஞ இம் சூ-கியோங் (வயது 21) வடகொரியாவில் நடந்த உலகஇளைஞர் கொண்டாட்டத்துக்கு (ஜுலை 1—7) சென்ற காரணத்தால் சிறைப்படுத்தப்படவிருந்ததால் நாடு திரும்பாது ஜுலை 27முதல் ஆகஸ்டு 1 வரை உண்ணுவிரதப் போராட்டத்தில் இறங்கினுர்.

நீதிக்கான கத். குருக்கள் சங்கத்தைச் சேர்ந்த பல குருக்கள் இம் நாடு திரும்ப அனுமதிக்கும்படி ஆர்ப்பாட்டம் செய்தனர், 20,000 துருப்புக்கள் ஆர்ப்பாட்டக்காரரை

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்.)

## யாழ். ஆயர் நாடுதிரும்பினுர்

திருத்தந்தையைச் சந்திப்பதற்காக வத்திக்கான் சென்றிருந்த யாழ். ஆயர் இம் மாதம் 16-ம் திகதி கொழும்பு வந்து சேர்ந்தார். நேற்றைய தினம் (ஆக. 17) யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த ஆயர் அவர்கள் இலங்கை ஆயர் மன்றக் கூட்டத்தில் பங்கு கொள்வதற்காக மீண்டும் கொழும்பு செல்லவுள்ளார்.

**யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் 23 ஆம் திகதி பிற்பகல் 4-30 மணிக்கு மாபெரும் வரவேற்பு**

★

**சிறப்பிதழ் உள்ளே...**

★



திருத்தத்தையுடன் அ. ம. தி. உயர் தலைவர் அதிவண. சாகோ அ. ம. தி

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் கருத்து

### புதிய பாதை

அண்மைக்காலத் திருச்சபை வரலாற்றில் அசிசி என்றதும் 1986 ஒக்ரோபரில் அங்கு நடைபெற்ற சர்வ மதத் தலைவர்கள் சமாதானத்துக்காகச் செபிப்பதற்காக ஒன்றுகூடியமை நினைவுக்கு வரும். இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றுகூடலுக்கு வழிவகுத்தவர் அமலமரித்தியாகிகளின் சிரேஷ்ட தலைவர் மார்செல்லோ சாகோ அ. ம. தி. யாவார்.

அன்று அங்கு கூடியிருந்த அத்தனை மதப்பிரமுகர்களையும் பெயர் சொல்லி அறிமுகப்படுத்தும் அளவுக்கு இவர் அனைவரையும் அறிந்திருந்தார்.

1986 செப்ரெம்பர் 13 ஆம் திகதி அமலமரித்தியாகிகளின் புதிய சிரேஷ்டராக நியமிக்கப்பட்ட அதி வண. சாகோ அடிகள் இத்தாலியைப் பிறப்பிடமாகக் கொண்ட போதிலும் ஆசியாவுடனும் பௌத்த மதத்தினருடனும் அதிக ஈடுபாடு கொண்டிருந்த காரணத்தால் தமது புதிய பதவிப் பொறுப்புக்கள் மத்தியிலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சர்வ மதத்தலைவர்கள் ஒன்றுகூடலுக்குப் பெரும் பங்களிப்பை ஆற்றக் கூடியவராக இருந்தார்.

1932 இல் பிறந்து 1959 இல் குருவான இவர் தென்கிழக்காகிய நாடான லாவோசுக்கு மறைபோதகப் பணியாளராக அனுப்பப்பட்டார். இரண்டு ஆண்டுகளுக்குப்பின் தாய்லாந்தில் அமலமரித்தியாகிகளின் சிரேஷ்டரின் பிரதிநிதியாகப் பணிபுரிந்தார். லாவோசிலிருந்து 1966 இல் உரோமாபுரிக்குச் சென்று மறைபரப்புப்பணி என்ற துறையில் கிரகோரியன் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு 1971 ஆம் ஆண்டு மீண்டும் லாவோசுக்கு வந்தபோது லாவோஸ்–கம்போடிய ஆயர் சங்கததின் பௌத்தகாரியாலயப் பொறுப்பாளராக நியமனம் பெற்றார்

1973 இல் பௌத்த பிக்குகள் சிலரை அழைத்துக் கொண்டு திருததந்தை 6 ஆம் சின்னப்பரைச் சந்திக்க வத்திக்கான் சென்றமை, மதத் தலைவர்களிடையே ஒற்றுமையை உருவாக்க அவர் கருத்தாயிருந்தமை வெளிப்படையானது.

1983 இல் கிறிஸ்தவரல்லாதவருக்கான வத்திக்கான் தலைமைக் காரியாலயச் செயலராக நியமனம் பெற்றார். பிறமதத்தினருடன உரையாடல் பற்றி பல நூல்களையும் எழுதி தமது நிலைப்பாட்டை விளக்கியுள்ளார்.

அமலமரித்தியாகிகளின் தலையாய பணி கிறிஸ்துவை அறியாத மக்கள் மத்தியில் கிறிஸ்துவை அறிவிப்பது. 2ஆம் வத்திக்கான் சங்கத்துக்கு முற்பட்ட காலயாயின் இப்பணி வெகு இலகுவானதாகும்.

ஆனால் 2ஆம் வத்திக்கான் சங்க ஒளியில். பிறமதத்தவர்களின் நற்பண்புகளைப் போற்றி வளர்க்க வேண்டிய கடப்பாடுகளின் மத்தியில் அ. ம. தி. சபை தமது நிறுவுனரின் நோக்கத்தை நிறைவேற்றுவது வெகு சிரமமான ஒரு பணியாகும்.

அசிசியிலே உலக மதத் தலைவர்கள் ஒன்றுகூடிச் செபித்தபோது திருச்சபை மற்ற மதத்தலைவர்கள் மத்தியில் இருந்த இறை அனுபவத்தையும் இறைமையையும் போற்றியமை வெளிப்படுத்தப்பட்டது.

கிறிஸ்துவை அறியாத பிறமத மக்கள் மத்தியில் கிறிஸ்துவை அறிவிகக வேண்டிய பணியைத் தமது தலையாய கடமையாகக் கொண்ட அமலமரித் தியாகிகள் எவ்வாறு தமது பணியை இன்றைய காலகட்டத்தில் செயற்படுத்த வேண்டும் என்பதற்கு அவர்களுக்கு வழிகாட்டுவதற்கு இத்தகைய அனுபவம் மிக்க ஒருவரே தேவைப்பட்டது

திருச்சபையின் புதிய படிப்பினைகளை அறிந்தவரும், அனுபவ வாயிலாக பல மதமக்களின் வழிபாட்டு முறைகளை உணர்ந்தவரும் மட்டுமன்றி, அவற்றில் பாண்டித்தியம் பெற்றவருமான புதிய சிரேஷ்டர் காலத்துக்குகந்தவர் என்றே கூறவேண்டும்.

இலங்கை மண்ணில் நான்கு மறைகளும் வேரூன்றியிருக்கும் சூழலில் சிறுபான்மையினரான கத்தோலிக்கர் எத்தகைய அணுகு முறையை மேற்கொண்டு மறைபரப்புக் கடைமையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்கு சிரேஷ்டரின் வருகை பெரிதும் உதவும் என நம்புகின்றோம்.

## தேனருவி

### ஆண்டின் 20-ம் ஞாயிறு (27—08—89)

### பாதை தெரிந்தும்- எங்கே அலைகிறோம்?

வெளியூர் பயணம், திருமண ஏற்பாடு, பணமுதலீடு, என்று முக்கிய நிகழ்ச்சியில் அடியெடுத்து வைக்கும்போது மனதில் ஒரு வித சஞ்சலம். எப்படியான விளைவோ? என்ற கேள்விக்குறிகள். எதிர்காலம் ஒரு இருட்டறை போன்றது. முன்னேறுவதற்கு வாழ்வில் முதலீடுகள் செய்யத்தான் வேண்டும். தயங்குபவர்கள் வளர்ச்சியில் தடங்கலைத்தான் காணுவார்கள்.

'மீட்பு' என்பது இஸ்ரவேல் மக்களின் மனதில் நீடித்திருந்த ஒரு ஏக்கம், சுபீட்சத்தை எதிர்பார்ப்பது ஒவ்வொரு மனிதனதும் இயற்கையான ஓர் ஆவல். அதனால் யார் மீட்புப் பெறுவார்கள்? என்ற வினா எழுப்பப்பட்டது. அதற்கு இயேசு ஒரு கடினமான பதிலையே வழங்கினார், ஒடுக்கமான வாயில், கடினமான பாதை, அதனால் பலர் அதன் வழியே நுழைய மறுக்கின்றார்கள். சுபீட்சமான எதிர்காலத்தைச் சுலபமாகத் தட்டிக்கொள்ள வேண்டுமென்று மனப்பால் குடித்துக்கொண்டிருந்த மக்களுக்கு இயேசுவின வார்த்தை அதிர்ச்சியைக் கொடுத்திருக்கலாம்.

இயேசுவின் பிரசன்னத்தை நாடியவரும், இறைமகனுக்கு அருகிலேயே வாழ்ந்த பலரும் அவரது வார்த்தையை அலட்சியப்படுத்தி, தட்டிக்கழித்தனர். ஏதாவது 'நன்மை' பெற விரும்பினரே தவிர அவரைப் பின்பற்ற, அவரது பாதையைத் தெரிவுசெய்ய பின்வாங்கினர்.

அழைக்கப்பட்டவர். என்பதனால் அல்ல அதற்கு ஏற்ப வாழ்ந்தனர் என்பதே இறைவனின் தீர்ப்பின் அளவுகோல். இசையாசின் முன்மொழிவும், இயேசுவின் கண்டிப்பும் மக்களுக்கு மனச்சாட்சியாகச் செயற்படுகிறது.

எமது முன்னோர்களின் லைசன்சிலே எம் வண்டிகளையும், ஓட்டலாம் எனப் பார்க்கிறோம் ஆபிரகாம், ஈசாக், யாக்கோப்பு என்று பெருமையாய்ப் பேசிக்கொண்டு நமது பங்களிப்பையும், நமது கடமைகளையும், அலட்சியப்படுத்துகிறோம். ஆயினும் 'அழைக்கப்பட்ட வர்' என்ற லேபிள் குத்தாமல் தமது வாழ்வினால் இறைவனுக்கு ஏற்ற, அறநெறிகளுடன் வாழ்ந்து- இறையரசில் புற இனத்தவர் நுழைவர்.

கிறிஸ்தவர்கள், தொண்டர்கள், பக்திமான்கள், என்ற முகமூடிகளைப் போட்டுக் கொண்டு நாம் எப்படியும் வாழலாம் என்பதில்லை. நான் இறைவனை ஏற்றுக்கொள்வது முக்கியம் தான். ஆனால் அந்த இறைவன் என்னை ஏற்றுக் கொள்ள என்னிடம் ஏதாவது தகமை உண்டா? இறைவன் ஒரு தகப்பனைப்போல் மக்களாகிய எம்மை கண்டித்துத், தண்டித்துத் திருத்தி நேரிய பாதையில் நடக்கவைக்க விரும்புகிறார். நாமோ பிடிவாதம் கொண்டவராக, மனமாற்றம் வேண்டாம், சுயநலவாதிகளாக, வரட்டு வேதாந்தங்களுடன் நான் சிந்திப்பதும், பேசுவதும், போதிப்பதும், நடப்பதும் நூறு வீதம் சரி என்றல்லவா வாழ்கிறோம்?

உண்மையில் நாம் நடப்பது இயேசு காட்டும் ஒடுக்கமான பாதையல்ல. எனக்கு சாதகமான, நானே ஏற்படுத்திக் கொண்ட விசாலமான பாதை. அது விண்ணரசுக்கு வெளியே எம்மை ஏமாற்றத்துடனும், புலம்பலுடனும் அலைக்கழிக்கும் பாதை.

ஆண்டவரே, நான் செல்ல வேண்டிய பாதையை நான் அறிந்தும் ஊதாரியாக அலைவது ஏனோ?

சுவாமி ஜீவா போல் அ.ம.தி

இசை. 66 : 18 - 21 அனைவரையும் கூட்டிச்சேர்க்க வருகிறேம்.
எபி. 12 : 5 - 7, 11 - 13 ஆண்டவர் கண்டித்துத் திருத்துகிறார்.
லூக். 13 : 22 - 30 ஒடுக்கமான வாயில் வழியே நுழையப் பாடுபடுங்கள்.

## புனிதர் வழியில்

**புனித பத்தாம் பத்திநாதர்- ஆகஸ்டு 21 (கி. பி. 1835-1914)**

1835 ஆம் ஆண்டு இத்தாலி நாட்டில் ரியேஸ் நகரில் பிறந்தவர். இளமையிலேயே இவரிடம் அதிக புத்தியும் ஞானக் காரியங்களில் ஆர்வமும் காணப்பட்டன. 1858 ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்று பங்குத்தந்தையாக நியமிக்கப் பட்டபோது "எல்லா மனிதருக்கும் எல்லாம்'' என்ற குறிக்கோளோடு திருப்பணியைத்தொடர்ந்தார். 1884 ஆம் ஆண்டுஆயராக நியமனம் பெற்றார். பின் கர்தினலாக உயர்த்தப்பட்டு மூன்றுநாட்களின்பின் வெனிஸ் நகர பிதாப்பிதாவாக உயர்த்தப்பட்டார். 3 ஆம் சிங்கராயர் இறந்தவுடன் பாப்பரசர் ஆனார். "திவ்விய நற்கருணையின் பாப்பரசர்'' எனப் புகழப்படும் இவர் முதலாம் உலகப்போரின் அதிர்ச்சியினால் 79 ஆவது வயதில் மரணமானார்.

**அரசியான புனித கன்னி மரியம்மாள் ஆகஸ்டு - 22**

இயேசு எல்லா வழிகளிலும் விண்ணுக்கும் மண்ணுக்கும், அரசர் என்பதை புரிந்துகொள்வது இலேசான காரியம். ஏனெனில் அவர் மெய்யாகவே தேவனும், மனிதனும் ஆவார். கன்னிமரி கிறிஸ்துவோடும் இணைந்திருப்பதனால் அவளுக்கும் அரசி என்னும் பட்டம் பொருத்தமானது. அரசி என்பதனால் உலக மீட்பர் திரட்டி வைத்திருக்கும் ஞானச் செல்வங்களை மக்களுக்கு வாரிவழங்குகின்றாள். எனவே இவள் படைப்புகளுக்கு எல்லாம் மேலானவள். இத்திருநாளை 1954 ஆம் ஆண்டு 12 ஆம் பத்திநாதர் ஏற்படுத்தினார்.

**புனித லீமாரோஸ் ஆகஸ்டு- 23 (கி. பி. 1586 - 1617)**

இவள் பெரு என்ற மாகாணத்தில் லீமா என்ற இடத்தில் பிறந்தவள். தனது 20 ஆவது வயதில் புனித சாமிநாதரின் 3 ஆவது சபையில் சேர்ந்து அதிக தவமுயற்சிகள் செய்தாள். பேயின் பல சோதனை, தந்திரங்களை மிக வலிமையோடு வென்று தன்னை அடக்கி ஆண்டதனால் ஆண்டவர் பலமுறை காட்சிகொடுத்து மகிழ்வித்துள்ளார். அடிக்கடி புனிதை "ஆண்டவர் துன்பங்களை அனுப்பும்போது அதே அளவுக்கு நன்மைசெய்யவும் மறப்பதில்லை'' என்று கூறுவாள். இவளே பிலிப்பைன்ஸ் தீவுக்கும், லத்தீன் அமெரிக்காவுக்கும் பாதுகாவலி.

**புனித பர்த்தலோமியோ ஆகஸ்டு- 24**

அப்போஸ்தலரில் ஒருவரான இவர் இயேசுவினுடைய போதனைகளையும், புதுமைகளையும் கண்டு தர்மவழியில் உத்தமராய் ஒழுகினார். இயேசுவின் விண்ணேற்றத்தின் பின் பரிசுத்தாவியின் ஏவுதலின் படி சின்னாசியாவின் பல இடங்களிலும் வேதம் போதித்து ஆர்மீனியா நாட்டுக்குச் சென்று பலரை சத்திய வேதத்தில் சேர்த்துக்கொண்டார்.

**புனித 9 ஆம் லூயிஸ் (ஞானப் பிரகாசியார் அரசர்) ஆகஸ்டு- 25 (கி. பி. 1226-1270)**

இவர் 11 வயதில் தன் தந்தையின் இறப்பின பின் பிரான்ஸ் நாட்டின் அரசனானார். பக்தி நிறைந்த இவர் நாள் தோறும் இரண்டு பலிப்பூசை காண்பார் யாரும் அறியாமல் நீண்டநேரம் செபத்திலும், தவத்திலும் ஈடுபடுவார். ஏழைகளை ஆதரிப்பார். தன் நாளை நாடார். பல மருத்துவமனைகளை கட்டுவித்தார். நோயாளிகளுக்குத்தானே சிகிச்சை செய்வார். தன்னுடைய அரண்மனையில் யாரும் தீயபேச்சுபேச இடமளியார். இவர் பிரான்சிஸ் அசிசியார் ஏற்படுத்திய 3 ஆவது சபையில் உறுப்பினராக இருந்தார்.

S. S. கருணைதாஸ்
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# பாதுகாவலன் அ. ம. தி. சிறப்பிதழ்

யாழ்.பிராந்திய அ.ம.தி

## அதிபரின் செய்தி



அமலமரித் தியாகிகளின் உயர் சிரேஷ்டர். அதி. வண மார்சல்லோ சாகோ அவர்களது வருகை அமலமரித் தியாகிகளுக்கு மட்டுமல்ல ஈழமக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியும், முக்கியத்துவமும் பொருந்திய ஒருநிகழ்ச்சியாகும்,எமது சபையின் ஸ்தாபகர் முத்திப்பேறு பெற்ற இயூஜின் டி மசனெட் ஆண்டகையும் அவர் வழித் தோன்றலான ஒவ்வொரு உயர் சிரேஷ்டரும் எம்நாட்டில் வாழும் மக்களில் விசேட அன்பும் கரிசனையும் கொண்டிருந்தனர். கடந்த 60 வருடகாலங்களில் சிரேஷ்டர்களாகக் கடமையாற்றிய ஒவ்வொருவரும் தவறாமல் எம்மண்ணைத் தரிசித்துச் சென்றிருக்கிறார்கள்

லூயிஸ் பொன்னையா அ ம. தி

இன்றைய இக்கட்டான சூழல் மத்தியிலும் எம்மைத் தரிசிக்க இவர் வருவது ஒரு துணிகரமான செயல்தான் கடந்த சில வருடங்களாக நடைபெற்று வரும் கலவரங்களும், யுத்தமும், படையெடுப்புக்களும் எமது கலாச்சாரத்திலும் அருமை பெருமையாக கட்டிக்காத்த பண்பாட்டிலும் ஈடுசெய்ய முடியாத பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன. இடையூறுகள் மத்தியிலும் துணிவுடன் பணியாற்றிய ஒரு மறைப்பணியாளர் என்ற பெயருடன் விளங்கும் எமது சிரேஷ்டர் சாகோ அவர்கள் இந்த நெருக்கடி வேளையில் எம்மைச் சந்திக்க வருவது எமக்கு ஆறுதலையும் உற்சாகத்தையும் தருகிறது.


எங்கள் மத்தியில் அவர் இருப்பது அமலமரித்தியாகிகள் எமது அர்ப்பண உணர்வுக்குப் புத்துணர்வு தந்து எமது பணியின் விரிவாக்கலுக்கு உறுதுணையும் நல்கின்றது என்பதில் சந்தேகமில்லை. எமது ஸ்தாபகரின் வழித்தோன்றலாகிய சிரேஸ்டருக்கு எமது பணியையும் எமது சபைமட்டில் எமக்குள்ள பற்றுதலையும் வடபிராந்திய தியாகிகள் சார்பில் வெளிப்படுத்துகின்றோம் இச்சந்தர்ப்பத்தில் எம் பகுதியில் வாழும் மக்கள் எமது அமலமரித்தியாகிகளுக்கு அளித்து வரும் ஒத்துழைப்பைப் பாராட்டுகிறோம்.

மக்களின் நல்லெண்ணமும், ஒத்துழைப்பும், பக்க பலமும், இல்லையேல் எமது முயற்சிகள் பலனளிக்கமாட்டாது.

மேலும் எம் பணி திருச்சபையின் வளர்ச்சிக்கும் காலத்தின் தேவைக்கும் ஏற்ப வளர்ச்சி பெற இறை மக்களாகிய உங்கள் மன்றாட்டையும். தொடர்ச்சியான பங்களிப்பையும் கோருகின்றோம், இறை ஆசீர்.

தொகுப்பு:- சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

## மார்செல்லோ சாகோ



- லாவோஸ் நாட்டில் மறைபரப்பாளராக சேவை புரிந்தவர்.
- ரோமை, ஒட்டாவா, பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்.
- வத்திக்கான் செயலகத்தில் உயர்பதவி வகித்தவர்.
- அசிசி பட்டணத்தில் உலகின் பல மத தலைவர்களும் அணிதிரண்டு. உலக அமைதிக்காக செபிக்க வழி சமைத்தவர்.
- தற்போது அமல மரித்தியாகிகள் சபையின் உயர் சிரேஷ்டராகப் பொறுப்பேற்றிருக்கின்றவர்.

பல துறைகளிலும் பலராகங்களாக எதிரொலித்து செயற்திறமையுடன் வரலாறு படைக்கும் அபூர்வ ராகமானவர். அவர் வேறுஎவருமல்ல. எம் சிரேஷ்டர் மார்செல்லோ சாகோ அடிகளே:

இவர் இத்தாலிய நாட்டவர். அமல மரித்தியாகிகள் மிசனெறிகளாகப் பல நாடுகளுக்கும் சென்று பணியாற்றுபவர்கள் என்னும் உயர் இலட்சியத்தினல் கவரப்பட்டு இச்சபையில் இணைந்தார். இவர் பெரும்பாலும் பௌத்தர்கள். வாழும் லாவோஸ் நாட்டில் மறைபோதகராகப் பணி புரிந்தார் (1959—1966). அந்நாட்டில் எழுந்த சமயப் பூகம்பம் இவரோடு பணி புரிந்த அமல மரி தியாகிகளின் உயிர்களையும் விழுங்கியது. இந்த விதமான இன்னல்கள் மத்தியிலும் அங்கு பணி புரிந்தார். இவர் மறைபரப்புவியலில் கலாநிதிப் பட்டம் பெற்று 1974 வரை மீண்டும் லாவோஸில் பணியாற்றினர். ஒட்டாவா, ரோமாபுரி போன்ற இடங்களின் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகக் கடமையாற்றினர். ரோமாபுரியிலுள்ள மதங்களுக்கிடையிலான உரையாடலில் செயலராக நியமனம் பெற்றார். 1973-ம் ஆண்டிலிருந்து கிறிஸ்தவரல்லாதோர்—செயலகத்தில் ஆலோசகராகக் கடமையாற்றினர். கிறிஸ்தவ ஒன்றிப்பு, யூதமதத்துடன் சமயத் தொடர்பு போன்ற குழுக்களின் ஆலோசகராகவும் பணி புரிந்தார். பல ஆயர் பேரவைகளுக்கும், சம்மேளனங்களுக்கும் திறமைசால் ஆலோசகராகக் கடமை புரிந்துள்ளார். இத்தாலியம், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற மொழிகளில் நூல்களையும் எழுதிவெளியிட்டு உள்ளார்.

இவரது அனைத்துப் பணியினதும் மணி மகுடமாக 198்-ம் ஆண்டு ஒக்ரோபர் திங்கள் 27-ம் நாள் உலகின் பல பாகங்களிலிருந்தும் ஏறத்தாள 160 வேறுபட்ட சமயத் தலைவர்களை அசிசி நகரில் அணி சேர்ப்பதற்கும் நோன்பிருந்து உலக அமைதிக்காக ஜெபிப்பதற்கும் முன்னின்று உழைத்தவர் இவர் பல மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். புன்னகையும், துடிப்பும், கூடிய எளிமையும் கொண்டது இவரது தோற்றம். இவர் இன்னல்கள் இடையூறுகளைக் கண்டு மனம் சலிக்காது மறை பரப்ப வேண்டும், மக்களை மக்களிடமிருந்தும் இறைவனிடமிருந்துப் பிரிக்கும் இனமொழி, சமய வேறுபாடுகளைக்கடந்து மக்களை ஒன்றுபடுத்தவும், நெறிப்படுத்சவும் வேண்டுமென்ற இலட்சியதாகம் கொண்ட ஒரு மறைபரப்பாளர்.

இன, மத, மொழி வேற்றுமையினல் இரத்தக்கறை படிந்து குற்றுயிராகக் கிடக்கும் எம்மத்தியில் இவரது வருகையும் பிரசன்னமும் வெளி ஆடம்பரத்தினல் அல்லமாறுக ஒன்றுபட்ட சகோதர பாசத்தினல் அர்த்தம் பெறுகிறது. காலத்தின தேவைகளுக்கேற்ப பணிகளின் வடிவங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி மக்களுக்குப் பணியாற்ற விளையும், அமலமரித்தியாகிகளுக்கு இவரது வருகையும் வழிநடத்தலும் புதிய வழிகளைத் திறந்து விடும் என்பது எமது எதிர் பார்ப்பு.

## முக்திப்பேறு பட்டம் பெற்ற ஆயர் இயூஜின் டீ மசெனொட்



சாள்ஸ் இயூஜின டீ மசெனெட் ஆவணித் திங்கள் முதலாம் நாள் 1782இலே பிரான்சின் தெற்காசிய மார்சேயிப் பட்டணத்து எக்ஸ் என்னும் சிற்றூரிலே பிரபுக்களின் கோத்திரத்திலே உதித்தார். பிறந்தது முதல் பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கத்தால் நாட்டுக்கு நாடு அகதியாகக் கடத்தப்பட்டார். இந்தக் கசப்பான அனுபவம் அவருடைய ஆரம்பக் கல்வியைப் பாதித்தபோதி

(தொடர்ச்சி 8-ம் பக்கப்)

## திருக்குடும்ப மாகாணத் தலைவியின் செய்தி

அமல மரித்தியாகிகளின் சபை முதல்வர் அருள்தந்தை சாக்கோ அடிகள் எமது மறைமாவட்டத்திற்கு முதன்முறையாக வருகை தருவதைப் பெரு மகிழ்வுடன் வரவேற்கின்றோம். திருக்குடும்ப சபைச் சகோதரிகளாகிய எமக்கு இந்நிகழ்ச்சி முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாக அமைகின்றது. 1857-ம் ஆண்டு எமது சபை நிறுவுனர் தமது மரணத்தறுவாயில் எமது சபையினை அமல மரித்தியாகிகள் சபை முதல்வரும், அன்றைய மாசேல் மாநில ஆயரும், தமது உற்ற நண்பருமாகிய அருள் திரு. மசனெட் அடிகளிடம் ஒப்படைத்திருந்தார். இதன் நிமித்தம் அமல மரித்தியாகிகள் சபையினர் திருக்குடும்ப சபையின் சகோதரர்களாகவும், பாதுகாவலர்களாகவும் விளங்குகின்றனர். எமது இரு சபைகளுக்குமிடையிலும் விளங்கும் இந்தத் தொடர்பின் நிமித்தம் அவரது வருகை எமக்கு முக்கியமான தொன்றாக அமைகின்றது.

பிரச்சினைகள் நிறைந்த இக்காலகட்டத்தில் எமது மக்களைச் சந்திக்க அவர் எடுத்த இம்முயற்சி போற்றுதற்குரியது. அவரைச் சமாதானத்தின் தூதுவராகவும், நற்செய்தி அறிவிப்பாளராகவும் வரவேற்கின்றோம்.

சங். M. கிறிஸ்ரபெல்

# வருக! வருக! அ.ம.தி.களின் உயர்தலைவரே வருக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்கள் தியாகிகளே

அமல மரித்தியாகிகள் வட இலங்கையில் 1847-ல் கால் எடுத்து வைத்தார்கள். இவர்கள் வருகை எளியோர்க்கு நற்செய்தி, சிறைப்பட்டோருக்கு விடுதலை, துயருற்றோருக்கு மகிழ்ச்சி என்ற நற்செய்தியுடன் வந்த இறைமகனே எம் மண்ணிற்கு வந்ததாய் அமைந்தது. வட இலங்கையிலே கிறிஸ்தவ விசுவாசம் கலப்படம் அடைந்து கிறிஸ்தவ வாழ்வு அருகிப் போகும் அன்றைய நிலையிலே இவர்களின் வருகை கிறிஸ்தவத்திற்குப் புதுஉயிர் கொடுத்தது. செல்வத்தையும் செல்வாக்கையும் கையாளாது வாழ்வின் நற்சாட்சியத்தினாலேயே கிறிஸ்தவ மறையைப் புதிதாய் பரப்ப முடியும் என்பதைக் கண்டு கொண்டு மறைப்பணியையும் சமூகப்பணியையும் வாழையடி வாழையாய்ச் சிறப்புற இத்தியாகிகள் ஆற்றினர் என்பதற்கு சரித்திரம் சான்று பகர்கிறது.

யாழ் மண்ணில் உள்ள அனைத்துப் பங்குகளும் இத்துறவியரின் தியாகக் கரங்களால் உருவாக்கம் பெற்றவையே. யேசு தமது பணியைத் தாம் தெரிந்து கொண்ட அப்போஸ்தலரிடம் ஒப்படைத்து மறைந்திருப்பது போல, அமலமரித் தியாகிகள் மறைவட்டக் குருக்களை உவப்புடன் உருவாக்கித் தாம் செய்த பணியை அவர்களிடம் ஒப்படைத்து விட்டுத் தமது பணியை இன்று சிறப்புத்துறைகளில் திசை திருப்புவதையும், வங்காள தேசம், பாக்கிஸ்தான், இந்தியா, மலேசியா என்னும் நாடுகளுக்கு மறைபரப்பு ஆரம்பப் பணி செய்ய தமது தாயகத்தை விட்டு விரைவதையும், நோக்கும்போது இவர்கள் தமது ஸ்தாபகர் இயூஜீன் மசனட் ஆண்டகையின் இலட்சியப் பாதையில் திருச்சபையை அன்பு செய்யும் தியாகிகள் என்பது வெள்ளிடைமலை.

இன்றைய போர்ச்சூழல் உள்ளங்களையும், உடலையும் உடைத்துத் தகர்ப்பதோடு அல்லாமல் ஆன்மீகத்தையும் ஆற்றல் இழக்கச் செய்கிறது என்பதை அறிந்து உளவளப் பணி, மருத்துவ மனைப்பணி, வேதாகம அடிப்படை ஆன்மீகப் பணி எனபனவற்றில் இவர்கள் கவனம் செலுத்துகிறார்கள். அகிம்சை வழியைப் பரப்புதல், பொதுநிலையினரை முதிர்ச்சியுடை தலைவர்களாய் உருவாக்குதல், குடும்பப்பணி, இளைஞர் பணி போன்ற சிறப்புத் துறைகளிலும் இவர்களின் கவனம் ஈர்க்கப்பட்டால் எம் மண் வளம்பெறும் என்பதில் ஐயமில்லை.

தமது சொந்த சுற்றம் சூழலைத் துறந்து எமக்காய் எரிந்து அணைந்த வெளிநாட்டு அமலமரித்தியாகிகளை நெஞ்சுருக நினைப்பதும் இன்று எமது மண்ணிலேயே தங்கியிருந்து மக்களோடு மக்களாய் வாழ்கின்ற எமது உள்ளூர் அமலமரித்தியாகிகளை மனமார வாழ்த்தி அவர்கள் வாழ்வும் பணியும் மேலும் சிறக்க வேண்டுவதும் இச்சந்தர்ப்பத்தில் சாலப் பொருத்தமுடையதாகும்.

அருள்திரு. இரா. யோசவ்.

(இவர் யாழ் மறைவட்டக் குரு. நல்லூர் சுவாமி ஞானப் பிரகாசர் அ. ம. தி. அவர்களின் பங்குத் தளங்களின் அனுபவம் கொண்டவர்).



# ஒன்றுபட்ட வாழ்வு

— S. M.செபஸ்ரியன், அ. ம. தி.

அமல மரித்தியாகிகள் சபை ஒரு உலகளாவிய சபையாகும். இச்சபையின் ஸ்தாபகர் பிரான்ஸ் தேசத்தில் ஒரு புரட்சியின் வேளை பூத்த ஒரு பூ. பிரெஞ்சுப் புரட்சியினால் இறையுணர்வு மங்கி உடலாலும் உள்ளத்தாலும் நலிவுற்று ஆயனில்லா ஆடுகள் போல கிடந்த பிரான்ஸ் தேச மக்களின் உருவாக்கம் கருதி உண்டாக்கப்பட்ட ஒரு சிறிய குழுவாகும். பிரான்ஸ் நாட்டில் புரோவான்ஸ் என்ற சிறிய தேசத்தில் ஒரு வரையறுக்கப்பட்ட சூழலின் தேவையை நிறைவு செய்ய உருவாக்கப்பட்டாலும் மசெனட் ஆண்டகையின் மனதில் வளர்ந்த உலகளாவிய ஆன்மீக வாஞ்சையினால் பிரதேச வரையறைகளைக் கடந்து பாரெங்கும் பரந்தது. மக்கள் ஆன்மீக தாகத்தால் துடிக்கின்றார்கள் என்ற வார்த்தை காதில் ஒலித்ததும் இயூஜின் ஆண்டகையின் இதயமும் மறைபரப்பு ஆவலால் துடித்தது. இச்சபையில் இணைய விரும்பும் ஒவ்வொரு துறவியும் குறிப்பிட்ட ஒரு நாடு, மொழி, இனம் என்ற வரையறைகளோடு தன் பணிக்களத்தை முடக்கி விடாது தேவையேற்படும்போது எங்கெல்லாம் தேவை எழுகிறதோ, அங்கெல்லாம் ஆண்டவன்குரல் ஒலிக்கிறது என்ற பரந்த, விரிந்த பணிக்களத்தைப் பார்க்க அடியெடுத்து வைக்கின்றனர். இந்தப்பரந்த மனம் இறைவனுடைய ஆசீருக்கும் அருளுக்கும் நல்ல விளைநிலமாயிற்று. அதனால் அழைத்தல் பெருகிற்று 1988 மார்கழி 31 இன் புள்ளி விபரப்படி 5638 அமல மரித்தியாகிகள் உலக முழுவதும் பரந்துள்ளனர் இவர்களில் 47 ஆயர்கள் உட்பட 4123 குருக்களும் 714 அமதி சகோதரர்களும் 531 குருமாணவர்களும் உள்ளனர்,

உலகின் எட்டுத்திசைகளிலும் ஏறக்குறைய 60 நாடுகளில் அமலமரித்தியாகிகள் சேவையின் அடிச்சுவடுகளைப்பதித்துள்ளனர். உலகின் எத்திசையில் எப்படிப்பட்ட பணி புரிந்தாலும் இவர்கள் அனைவரையும் ஒரு குடும்பமாக இணைக்கின்ற அன்புணர்வும் சகோதர பாசமும் இவர்கள் மத்தியில் இழையோடிக் கொண்டிருக்கின்றன.

இச்சபையின் அங்கத்தவர்கள் சபையின் பொதுக் கொள்கை, பொதுப்பணி பொது ஆன்மீக உணர்வு போன்றவற்றைத் தம்மகத்தே கொண்டுள்ளனர். ரோமில் இயங்கிவரும் உயர்சிரேஷ்ட குழுவிலே ஒவ்வொரு கண்டத்திலிருந்தும் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கிறார்கள். இவர்கள் ஒவ்வொரு பிரதேசத்திலும் வாழும் அமல மரித்தியாகிகள் மத்தியில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒவ்வொருவர் பிரச்சினைகளையும் இன்பதுன்பங்களையும் மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள ஆவன செய்கிறார்கள்.

சபை ஸ்தாபகர் தன் மரணப் படுக்கையின் பொழுது சூழ்ந்து நின்ற சபை அங்கத்தவர்களிடம் பணித்த வேண்டுகோள்.

"உங்கள் மத்தியில் அன்பும், ஆன்மீகத்தில் வாஞ்சையும் வேண்டும்'' என்றார்.



# யாதும் ஊராம் யாழ்மரி மைந்தருக்கு

''கிறிஸ்தவர்கள் வாழும் சிறு பகுதி மட்டுமல்ல, மக்கள் வாழும் ஒவ்வொரு பகுதியும் உங்கள் பணிக்களங்களே'' என்ற இலட்சிய நோக்கு, ஆயர் டி மசனட்டின் அமுத வாக்காகும். அன்புள்ளம் கொண்டவர்களுக்குப் இவ்வுலகம் எல்லாம் சொந்தம், அவ்வுள்ளம் நாடு, இனம், மொழி குலம், கோத்திரம் என்ற குறுகிய எல்லைகளைத்தாண்டி, ''யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற முழுமையை நோக்கி முனைந்து செல்லுகின்றது. ''ஏழைகட்கு நற்செய்தி நவில்வதே' எமது இனிய பணி என வாழும் அமலமரித் தியாகிகள் இன்று அகில ஐரோப்பாவிலும், ஆபிரிக்காவின் பாலைவனத்திலும் தென் அமெரிக்காவின் கன்னிக்காட்டிலும் லாஓசின் உயர்மலையிலும் தெங்குநிறை ஈழத்திலும் சூரியோதய யப்பான் பிலிப்பைன்ஸ், அவுஸ்திரலியாவிலும், குணதிசைமுதல், குடதசை வரையில் அகஇருள் அகற்றி, அருள்ஒளி ஏற்றுகின்றார்கள. ஆயர் டி மசனட்டின் அமலமரித்தியாகிகள் எம் வடஈழ மண்ணில் பணிக்களம் கண்டு பல தசாப்தங்கள் கடந்துவிட்டன. யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

✻✻✻✻✻✻✻✻✻✻✻

ஜெரோம் லப்பேட், அ.ம.தி.

✻✻✻✻✻✻✻✻✻✻✻

யாழ். மண்ணின் அமலமரித் தியாகிகள், இன்று பரந்துபட்ட ஆசிய மண்ணிலே பல இடம் சென்று பலகளம் கண்டு, இயேசுவின் சிலுவையை நிலைநாட்ட அமலமரியின் அருள் அன்பை எடுத்துரைக்க இறை பணியோடு மக்கள் வாழ்வை வளப்படுத்தும் சமுகப்பணிகளும், செய்து வருகின்றார்கள். உலக ஜனத்தொகையில் 56

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# அமதி புரம்

## ஒரு சமூகப் பணி

லீனஸ் சொய்சா, அ. ம. தி.

யானை, கரடி, புலி வாழும் கானகத்தின் கண் பலவேறுபட்ட கிராமங்களுக்கு மத்தியிலும் அமலமரித் தியாகிகளின் அயராத உழைப்பின் காரணத்தினால் உருவாகியிருக்கும் ஒரு புதிய சிறிய அழகிய கிராமமே அமதிபுரமாகும். இது புதிய கிளிநொச்சிப்பங்கின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலே, முறிகண்டி அக்கராயன் றோட்டிலே நான்காவது மைல் கல்லிலே அமைந்துள்ளது. இங்கு ஏறக்குறைய 75 குடும்பங்கள் வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் 1977லும் அதன் பின்னரும் ஏற்பட்ட இனக்கலவரங்களினால் மலையகத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களாவர் இவர்கள் உடமைகளை இழந்து அகதிகள் ஆக்கப்பட்ட நிலையில் வடக்கு நோக்கி ஓடிவந்த வேளையிலே அவர்களது தேவையறிந்து அமலமரித்தியாகிகள் சபையினர் அவர்களுக்கு மீண்டும் வாழ்வளிக்க, வாழ்க்கையிலே நம்பிக்கையூட்டி வாழவழி காட்டி அவர்களுக்கென அமைத்த கிராமமே அமதிபுரமாக மலர்ந்துள்ளது.

இங்கு வாழும் மக்கள் பெரும்பாலும் படிப்பறிவில்லாதவர்களே, இதன் காரணமாக அவர்களுடைய பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு வளமுள்ளதாகவும் சுபீட்சம் நிறைந்ததாகவும் அமைய அவர்களுக்கெனப் பாடசாலை அமைக்கப்பட்டு அதிசிரத்தையோடு அக்கறை காண்பிக்கப்பட்டு வருகின்றது. இதற்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. இங்கு வாழ்வோர் தங்கள் நாளாந்த வாழ்க்கையை ஓட்டிச்செல்லக் கூலிவேலை செய்து பிழைக்கிறார்கள். இவ்வாறு இருந்த போதிலும் சொந்தத்திலே விவசாயம் செய்ய ஊக்குவிக்கப்பட்டு உதவி செய்யப்படுகின்றார்கள்.


இங்கு வாழ்வோருக்கு நிரந்தர உறைவிடங்கள் (சொந்தமாக வீடுகள்) அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே இவர்கள் நீண்ட காலமாக மலையகத்தில் சொந்தம் என்று சொல்லிக்கொள்ள வீடு நிலம் இல்லாமல் இருந்தவர்களுக்கு வீடும் நிலமும் சொந்தமாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கு வாழும் இளைஞர்களுக்குத் தொழிலில் ஆர்வத்தை உண்டுபண்ணப் பயிற்சிகளுக்கு ஆசைப்பட்டு தச்சுத தொழில், கட்டிடத தொழில் போன்றன பயிற்றுவிக்கப்பட்டு இப்போது அவர்கள் அத்தொழில்களை மேற்கொண்டு வாழ்க்கையைக் கொண்டு செல்லக்கூடியவர்களாக உள்ளனர்.

இக்கிராமத்திலே கிறிஸ்தவர்களும் இந்துக்களும் வாழ்கின்றனர். இவர்கள் எல்லோரும் மனிதர்கள் என்ற அடிப்படையிலே சமமாகக் கருதப்படுகின்றார்கள். மதவேற்றுமைகள் கிடையாது. இங்கே நடைபெறுகின்ற வருடாந்த ஆலயத் திருவிழா பேதமின்றி அனைத்து மக்களும் ஒரே குடும்பமாகச் சேர்ந்து ஆராதனைகளில் பங்குகொண்டு விழாவினைச் சிறப்பிப்பது. இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். ஏனெனில் இங்கு வாழும் இந்துக்களுக்கும் பாதுகாவல் அன்னை வேளாங்கண்ணியதான் என்பது அவர்களின் நம்பிக்கை. இந்த நம்பிக்கையில் தான் அவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். இது ஒரு சிறப்பு அம்சமாகும்.

"உண்மை அன்புள்ளம் கொண்டவர்க்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுச் சிற்பிகள்



அமலமரித் தியாகிகளின் சிலுவை

நித்திய அர்ப்பணத்தின் போது ஒரு அ. ம. தி. க்கு கொடுக்கப்படும் சிலுவை, கிறிஸ்துவின் தொடர்ச்சியான அளவில்லாத அன்பையும், கிறிஸ்து தம் பணிக்கு மற்றவர்களை ஈர்த்துக் கொள்ளும் தன்மையையும் குறிக்கின்றது.

மற்றைய குருக்கள் துறவிகளிடமிருந்துஒரு அ ம. தி. யை வேறுபடுத்தும் இச்சிலுவை, ஒரு அ. ம. தி. யின் அங்கியின் முக்கிய பகுதியாகும். அ. ம. தி. களின் அப்போஸ்தலிக்க பணியில் இச்சிலுவை புனித குறியாகவும், சிறப்பான சின்னமாகவும், அதிகாரத்தின் அடையாளமாகவும் அமைகின்றது. அ. ம. தி. களின் வாழ்வில் பிரதிபலிக்கும் தாழ்ச்சி, அன்பு, பொறுமை, கீழ்ப்படிவு, கற்பு, ஏழ்மை, விடாமுயற்சி போன்ற புண்ணியங்களை வெளிப்படுத்தும் கருவியாக இச்சிலுவை தொழிற்படுகின்றது.

—செ. எட்வின் அ. ம. தி.

வரலாற்றைச் சிலர் அலங்கரிக்கின்றார்கள். வரலாறு சிலரை அலங்கரிக்கின்றது. அந்தவகையிலே அமலமரித் தியாகிகளின் வரலாற்றை அலங்கரித்தவர்கள், வரலாற்றால் அலங்கரிக்கப்பட்டவர்கள் அநேகம்பேராவர், அவர்களிலே ஒரு சிலரை இங்கு நினைவு கூருவோமா?...

அருள்திரு போ

ஆன்மீகக் குருவாக மட்டுமல்ல சிறந்த பொறியியலாளராகவும், கட்டிடக் கலைஞராகவும் திகழ்ந்தார். புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபரான இவர் பிறமத மாணவர்களுக்காக இந்துமத விடுதியொன்றையும் ஆரம்பித்தார். கல்லூரியிலே பல சங்கங்களை ஆரம்பித்து அவற்றின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தார் தனது இறுதிக்காலத்தில் புனித வளனார் அச்சகத்தின் பொறுப்பாளராகக் கடமையாற்றினார்.

அருள்திரு குருசோ

''எளியோர்க்கு நற்செய்தியை அறிவித்தல்'' என்ற அ, ம, தி. யினரின் இலட்சிய வாக்கை வாழ்க்கையிலே காட்டியவர். வறியவர்களின் வாழ்க்கை நலனுக்காக தன்னை அர்ப்பணித்தவர்.வின்சென் டி போல், புனித வளன், புனித அந்தோனியார் கூட்டம் என்பவற்றில் இவர் சிறப்பான பணிகள் ஆற்றியுள்ளார்.

அருள்திரு மத்தியூஸ்

புனித பத்திரிசியார் கல்லூரி என்றவுடனே எமக்கு ஞாபகத்திற்கு வருபவர் மத்தியூஸ் அடிகளாரேயாகும். கல்லூரியின் வரலாறும் இவருடைய வரலாறும் பிரிக்க முடியாதன. சிறந்த கல்விமானாகிய இவர் இளைஞர்களின் மத்தியில் செல்வாக்குடையவராக விளங்கினார்.

சுவாமி ஞானப்பிரகாசர்

நீண்ட வெண்தாடியுடன் எமதுஞாபகத்தில்நிற்கும்இவர் சிறந்த மறைபரப்பாளரும் ஆய்வாளருமாவார். தமிழ்மொழி வளர்ச்சிக்கு இவராற்றிய பணி குறிப்பிடத்தக்கது. பரம்பரை இந்துக் குடும்பத்திலே பிறந்த இவர் கத்தோலிக்க குருவாகியதன் மூலம் தனது உற்றார் உறவினர்களின் விரோதியானார். எனினும் பல எதிர்ப்புக்களின் மத்தியிலும் தனது குறிக்கோளை நிறைவேற்றினார்.

அருள்திரு பிரான்சிஸ்

பொதுமக்களால் பெரிதும் அறியப்படாதவராக இருந்த இவர் 'மெய்மறைக் காவலன்' என்னும் ஆங்கிலப்பத்திரிகையின் ஆசிரியராக விளங்கினார். அரசியல் அறிவுடைய இவரால் இப்பத்திரிகையில் எழுதப்பட்ட ஆசிரியத் தலைப்புக்கள் அரசியற் தலைவர்களையும் கவரக்கூடியதாய் இருந்தன.

அருட்திரு தோமஸ் அடிகள்

புனித பத்திரிசியார் கல்லூரியின் நீண்டநாள் விடுதி மேற்பார்வையாளராகக் கடமையாற்றினார். ஆயரின் தூண்டுதலினாலும் தனது அயராத முயற்சியினாலும் செபமாலைத் தாசர் துறவிகள் சபையை நிறுவினார். இவரால் வழிநடத்தப்பட்ட இச்சபையின் துறவிகள் இன்னும் பல பணிகளை உற்சாகமுடன் புரிந்து வருகின்றனர்.

அருள்தந்தை லோங்

மத்தியூஸ் அடிகளாரைத் தொடர்ந்து புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றினார். சிறந்த கல்விமானாகத் திகழ்ந்த இவர் யாழ். பொதுநூலகத்தின் உருவாக்கத்திற்கு ஆற்றிய பணி என்றும் மறக்க முடியாதது. அன்னாரின் சேவையை மறக்காத நம்மவர்கள் நூலகத்திற்கு முன்பே அவருக்கு சிலையெடுத்து நினைவு கூருகின்றனர்.

அருள்திரு விசியன்

மன்னார், சில்லாலை, நாவாந்துறைப் பகுதிகளில் சிறப்பாக கடமையாற்றிய இவர் சிறந்த சொற்பொழிவாளரும், திருப்பணியாளருமாவார். தனது பணிவாழ்விலே சில நேரங்களில் மக்களின் நன்மைக்காக அவர்களை எதிர்த்தும் செயற்பட்டார். இதன் மூலம் பல துன்பங்களை அனுபவித்தார். மறைவட்டப் பரிபாலகராகவும், கணக்காளராகவும்' பள்ளிக்கூடங்களின் ஆணையாளராகவும் இவர் விளங்கினார்.

அருள்தந்தை சந்தியாகு

மாதோட்டம், அடம்பன் பகுதிகளில் பணியாற்றிய இவர் பெரும்பான்மையான மக்களைப் பிரிவினைகளில் இருந்தும் மீட்டு திரும்பவும்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்



## அன்னை மரியாளோடு...

அமலமரி தியாகிகள் என்றாலே அவர்களுடைய வாழ்விலே மரியாளின் பங்கு என்ன என்பது தெளிவாகின்றது. அ. ம. தி. சபை நிறுவுனர் முத்திப்பேறு பட்டம் பெற்ற ஆயர் இயூஜின் அவர்கள் தன்னுடைய சபைக்கு இத்திருநாமம் வழங்கப்படுவதற்கு முன் தன்னுடைய சபையை மரியாளின் பாதுகாவலிலே வைத்து அவள் மேல் எண்ணிலடங்காத பக்தி கொண்டு வாழ்ந்தார்.

இறைவனது அழைப்பிற்குத் தன்னை அர்ப்பணிக்கையில் அவளிடம் விளங்கிய ஆழ்ந்த விசுவாசமும், திறந்த மனமும் ஒவ்வொரு துறவிக்கும் மேல் வரிச்சட்டமாகிறது என்கிறது அமதிகளின் ஒழுங்கு நூல்.

"தாயோடு இருக்கும் சேய்க்கென்ன குறை'' என்ற பாச உணர்வு மரியன்னையின் மேல் அ. ம. தி. களுக்கு நிறைய உண்டு. இந்தத் தைரியத்தோடு தான் கடல் கடந்தும், இடர்களை எதிர்கொண்டும் பணியைத்தொடர்கின்றனர். குறிப்பாக அ. ம. தி. களின் நோக்கமாகிய கிறிஸ்துவையும், அவருடைய திருச்சபையையும் அன்பு செய்யவும், சிறப்பாக ஆன்மாக்களை இரட்சிப்பதிலுள்ள ஆர்வம் மென்மேலும் வளரவும் மரியாள் வழியாக இறைமகனின் அருளைப்பெற்றுக் கொள்ளுகின்றார்கள். ஈழத்தில் மரியாள் பக்தியையும், அவளது பெயரால் பல ஆலயங்கள், பதிகளை அமைத்தவர்களும் அமலமரித்தியாகிகளே.

சகோ. அந்தோனிமுத்து.

# தனித்துவமான செயற்பாடு

நற்செய்தி சொல்ல என்னை அனுப்பினார். என்பதே அமலமரித் தியாகிகளின் விருது வாக்கு. பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக சீர்குலைந்திருந்த மக்கள் சமுதாயத்தை, இறை வார்த்தையின் வல்லமையினால் சீர்படுத்தும் நோக்குடனேயே ஆயர் டி மசனெட் இலட்சியம் கொண்ட மேற்றிராசனக் குருக்களை ஒன்று சேர்த்துத் தமது சபையை தாபித்தார். காலப்போக்கில் அச்சபை ஒரு துறவற சபையாக உருவெடுத்து வளர்ந்து வந்தது. அன்று தொட்டு இன்றுவரையும் நற்செய்திப்பணியே அச்சபையினரின் முதலும் முக்கிய பணியுமாயிருந்து வருகின்றது.

ஆயர் பெற்றக்கினியின் அழைப்பை ஏற்று 1848-ல் வடஈழம் வந்த அமலமரித் தியாகிகள், பல்வேறு பணிகளில் ஈடுபட்டாலும், நற்செய்திப் பணியில் அவர்கள் கண்ணும் கருத்துமாயிருந்தனர். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களின் மொழியை நன்கு கற்று, அம்மொழியிலேயே நற்செய்தியை அறிவித்து, கிறிஸ்தவ சமுதாயங்களைக் கட்டி எழுப்பினர். குறிப்பாக நம்மண்ணில் பணிபுரிய வந்த பிரெஞ்சு நாட்டுத் தியாகிகள் சிறந்த போதகர்களாகவும், எழுத்தாளர்களாகவும் விளங்கினர். தங்களைத் தொடர்ந்து இப்பெரும் பணியைச் செவ்வனே ஆற்றிட சுதேச தியாகிகளையும் பயிற்றுவித்தனர்.

திருச்சபை வளர, வளர, எங்கும் போதகர்களின் சேவையும் தேவைப்பட்டது. இத்தேவையை நிறைவு செய்ய போதகர்களுக்கென்று ஒரு தனி இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. வென்னப்புவ என்னுமிடத்தில் 1948-ல் ஆரம்பிக்கப்பட்ட 'நசரேத்' என்னும் இல்லமே ஈழத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதல் போதகர்களின் இல்லமாகும். தமிழ், சிங்கள அமலமரித் தியாகிகள் இணைந்து உருவாக்கிய குழுவில் அருட்திரு Z.N.குரூஸ், L. A. அகுஸ்தின், வின்செண்ட், வீரக்கொடி, ஜோக்கிம், அலெக்ஸ் தசநாயக்கா போன்றவர்கள் அங்கத்துவம் வகித்தார்கள்' இவர்களின் கடின உழைப்பினாலும், சிறந்த போதனைகளினாலும், அமலமரித்தியாகிகள் ''சிறந்தபோதகர்கள்'' என்று ஈழத்தில் ஒரு தனி இடத்தைத் தட்டிக்கொண்டனர்.

ஈழத்தின் வடபகுதியில் அ. ம. தி. போதகர் இல்லம் ஒன்று இல்லாவிட்டாலும் சிறந்த போதகர்களுக்கு குறைவிருக்கவில்லை. அருட்திரு ஞானப்பிரகாசம், பிரான்சிசு, ஆசீர்வாதம், மருசலின், பீற்றர் போன்றவர்கள் சிறந்த போதகர்களாக விளங்கினர். பல்லாண்டுகளாக வடபகுதியிலிருந்து நிலவிய குறையை நிறைவு செய்ய பேரும் புகழும் பெற்ற பிரசங்கியான Z. N. குரூஸ் தலைமையில் அருட்திரு நவரத்தினம் M. J அல்பிறட் போன்றோரின் ஆற்றலுடன் அ. ம. தி. களின் தமிழ் போதகர் இல்லம் கொழும்புத்துறையில் 'அமல உற்பவம் என்ற இனிய பெயருடன் 1961 செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இவர்களின் அயராத உழைப்பினாலும் சிறந்த போதகங்களாலும் பயன் அடைந்த உள்ளங்கள் பல. இன்று அமல உற்பவ குருக்கள், என்னும் பதம் சிறந்த போதகர்களுக்கு ஒரு மாற்றுச் சொல்லாக ஈழமெங்கும் பயன்படுத்தப்படுகிறது.

1961—1983 வரை கொழும்புத்துறை அமல உற்பவத்திலிருந்து செயல்பட்டுவந்த அமலமரித்தியாகிகள் குழு தம் இல்லத்தை மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. 1983-ல் இருந்து பல பணிகள் - நிலையமான தொடர்பகத்திலிருந்து பணியாற்றுகின்றனர். இன்று போதகர் குழுவில் 5 குருக்கள் முழுநேர மறைஉரையாளர்களாக அருட்திரு யேசுதாசன், சிங்கராயர், ஜெரோம் லம்பேட், ஜீவாபோல், நீக்கிலாஸ் அடிகளாரும் இவர்களுக்கு உதவிக்கரம் வழங்கும் போதகர்களாக அருட்திரு. ஸ்ரான் பிலிப்ஸ், லீனஸ் சொய்ஸா அவர்களும் பணியாற்றுகின்றனர்.

மகா-ஞான ஒடுக்கம், நவநாட்கள் கருத்தரங்குகள் குழு-ஞான ஒடுக்கம், பயிற்சி முகாம்கள் போன்ற நிகழ்ச்சிகள் இவர்கள் பணியின் முக்கிய கட்டங்களாகும். இவர்கள் பல இன்னல்கள் மத்தியில் இப்பணியை நிறை வேற்றுகின்றனர். பயண நெருக்கடி, சூழல் மாற்றம், போன்ற வசதிக்குறைவுகளும் மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் மதிப்பீடுகளில் குழறுபடிகளும் (இறை வார்த்தையிலும் பார்க்க வெளி ஆடம்பரங்கள், அர்த்தமிழந்த சம்பிரதாயங்கள், உலகியல் போக்கு போன்றவற்றிற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம்), அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகளும் இவர்கள் பணியில் குறுக்கீடு செய்கின்றன. ஆயினும் அனைத்தும் தடைகளாக அல்ல சவால்களாகவே தியாகிகள் இவற்றை எதிர்கொள்கின்றார்கள். காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப இவர்கள் பணியின் கோலங்களும் மாற்றமடைய வேண்டும் என்பது இவர்களது தொடர்ச்சியான ஒரு நோக்கு. ஒவ்வொரு குருவும் போதகப் பணியைத் திறம்பட ஆற்ற அழைக்கப்பட்டாலும் இப்பணியில் கருத்துடன் செயற்பட ஒவ்வொரு அமலமரித் தியாகிகளும் முயலுகின்றனர்.

இ. யேசுதாசன் அ, ம. தி.

முழு உலகமும் சொந்தம் முத். யோசவ் ஜெராட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

ஈழமண்ணில் அமலமரித் தியாகிகள் சாலடியெடுத்து வைத்து இன்று கிட்டத்தட்ட 135 ஆண்டுகள் கழிந்துவிட்டன. குறிப்பாக தமிழ்த்தலத் திருச்சபையின் வளர்ச்சிக்கு அவர்களது பணிகள் ஊன்றுகோலாய் அமைந்தன என்ருல் அது மிகையாகாது. ஐரோப்பிய நாடுகளிலிருந்து வந்த அமலமரித்தியாகிகள் எமது மண்ணில் விசுவாசம் என்னும் விதையை விதைத்து பாதுகாத்து வளர்த்து அது இன்று விருட்சமாக உயர்ந்து நிற்கிறதென்ருல் மேலைத்தேய மறைபரப்பு பணியாளர்களின் அர்ப்பணமான பணிவாழ்க்கையேயன்றி வேறெதுவுமில்லை. அமலமரித்தியாகிகளின் ஆரம்பப்பணிகள் ஆலயங்களை அமைப்பதிலும் பாடசாலைகளை உருவாக்கி கல்வியை ஊக்குவிப்பதிலும், சமுதாயத்தின் தரைவிளிம்பில் வாழ்ந்தவர்களின்மீது அக்கறைகாட்டி இறையரசை அவர்கள் மத்தியில் பரப்புவதிலுமே தங்கியிருந்தன. இன்று காலத்தின் தேவைகளுக்கேற்ப அவர்களது பணிகள் வெவ்வேறு படிவங்களில் செயற்பட்டு வருவதை காணக்கூடியதாகவுள்ளது.

களில் பாதிக்கப்படுவோருக்கு உடனடி நிவாரணம் வழங்கி உதவி செய்வதிலும் ஈடுபட்டு வருகிருர்கள். எதிர்காலத்திலும் இன்றைய வன்செயல்களிலும் அதிகம் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் மத்தியில் பணிசெய்து புனர்வாழ்வு அளிப்பதற்கும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

**உளவளப்பணிகள்:** இன்றைய காலகட்டத்தில் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிகளினுல் உளரீதியாகப் பாதிக்கப்பட்டு வாழ்வோருக்கும், குடும்ப வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளினுல் அல்லலுறுவோருக்கும் உளவளத்துணையளித்து அவர்கள் வாழ்வில் நம்பிக்கையூட்டி வழிநடத்தும் பணிகளில் உளவளத்துணையாளர்களாக அமலமரித்தியாகிகள் செயற்படுகின்ருர்கள். குறிப்பாக சிறைகளிலே, முகாம்களிலே சித்திரைவதைக்குள்ளாகிய இளைஞர்கள் மட்டிலும் கூடிய அக்கறை செலுத்தி அவர்களது உளரீதியான பிரச்சினைகளுக்கு செவிமடுத்து நலமளிக்க முயன்று வருகின்ருர்கள். அத்துடன் முழுமனித ஆளுமை வளர்ச்சி சம்பந்தமான கருத்தரங்குகளை நடாத்துவதிலும் குறுகியகால பயிற்சி நெறிகளை நடாத்தியும் நல்ல ஆளுமையுள்ள மனிதர்களை உருவாக்கும் பணியில் ஈடுபடுகின்ருர்கள்.

**குருக்களை உருவாக்கும் ஆரம்ப பணிகள்:** அமலமரித்தியாகிகள் சிறிய குருமடத்திலே குருமாணவர்களுக்கு ஆரம்பப் பயிற்சி அளித்து உருவாக்கலிலும் இன்று கூடிய கவனம் செலுத்தப்படுகின்றது. இதன் மூலம் சுதேச அமலமரித்தியாகிகள் எமது மண்ணின் சூழலிலே உருவாக்கப்படவும், ஒருமுழுமையான உருவாக்கல் பயிற்சியின் மூலம் எதிர்காலத்தில் பணியினை சபையின் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் பணியாற்ற வழி நடத்தப்படுகின்ருர்கள். அத்துடன் மறை உரைப் பணிகளிலும் பாடசாலைகளிலும் வெளிநாடுகளிலும் மறைபரப்பு பணியில் ஈடுபடுகின்ருர்கள் அமலமரித்தியாகிகள்:


ஈற்றில் காலத்தின் தேவைகளை கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் புதிய பணிகளில் ஈடுபட தம்மைத்தயார் செய்து கொள்ளும் நிலையில் உள்ளனர். இதன்மூலம் எமது மண்ணில் இறையரசைப்பரப்புவதோடு வேதபோதக மறைபரப்பு பணிகளில் ஈடுபட்டுச் செயற்பட திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.

**பங்குத்தளங்களில்:** இன்று குறிப்பாக யாழ்ப்பாணம், மன்னர் மறைவட்டங்களில் உள்ள பங்குகளில் பங்குத்தந்தையர்களாக பணிபுரிந்து வருகின்ருர்கள் அமலமரித்தியாகிகள். "நலிந்தோருக்கு நற்செய்தி நவில என்னை ஆண்டவர் அனுப்பினர்" என்ற சபையின் விருதுவாக்கிற்கிணங்க பங்குகளில் ஏழைகள், தாழ்த்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் மத்தியில் பணிபுரிந்து இறையரசைப்பற்றி நற்செய்தியை அறிவிப்பதிலும், அவர்களது உடல், உள, ஆன்மீக வளர்ச்சியில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்ருர்கள். சபையின் நோக்கத்திற்கிணங்க 'திருச்சபையின் மனிதர்களாக' தலத்திருச்சபையின் வளர்ச்சிக்கு பங்குத்தளங்களில் பணிபுரிவதன்மூலம் இறையரசை கட்டியெழுப்ப உதவிபுரிகின்ருர்கள்.

**சமுதாயப்பணிகள்:** நாட்டில் இடம்பெற்ற வன்செயல்களின் காரணமாக அகதிகளாக இடம் பெயர்ந்தவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து நிரந்தரமாக குடியமர்த்தும் பணிகளிலும் அமலமரித்தியாகிகள் இன்று ஈடுபட்டுவருகின்ருர்கள். குறிப்பாக கிளிநொச்சி வட்டத்தில் அமைந்துள்ள அமதிபுரம் இப்படியாக இடம்பெயர்ந்தவர்களை மீளக்குடியமர்த்தி புனர்வாழ்வு அளிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. மன்னர் மறைவட்டத்திலும் புனர்வாழ்வுப்பணிகளுக்கு பொறுப்பாக அமலமரித்தியாகி ஒருவர் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பங்குத்தளங்களிலும் கூட இப்படியாக அசம்பாவிதங்

# முத். யோசவ் ஜெராட் அ. ம. தி.



அமலமரித்தியாகிகள் சபையின் ஸ்தாபகருக்கு அடுத்தபடியாக பீட மரியாதைக்கு (முத்திப்பேறு பெற்ற நிலைக்கு) உயர்த்தப்பட்டவர் யோசவ் ஜெராட் அடிகளாரே. 1988 புரட்டாதி மாதம் 15 ஆம் நாள் 2 ஆம் அருள் சின்னப்பர் ஆபிரிக்க நாட்டின் லெசத்தோ தேசத்திற்கு வருகைதந்திருந்தபோது இச் சிறப்பு மிக்க வைபவம் நடந்தேறியது.

ஜெராட் அடிகளார் 13-03-1831 இல் பிரான்ஸ் நாட்டில் பிறந்தவர். அமலமரித்தியாகிகள் சபையின் இணைந்து தனது 21 ஆவது வயதில் நித்திய வாக்குறுதி அளித்து பின்பு மறைபரப்பாளராக ஆபிரிக்கா தேசம் சென்ருர். தோல்விகள், கண்டிப்புக்கள், வேதனைகள், மத்தியிலும் நிலைகுலையாது கிறிஸ்துவுக்கு சான்று பகர விரும்பினுர். 1861 இல் இருந்து லெசத்தோ வாழ் பழங்குடி மக்களுக்கு (பசுத்தோ) மறைபரப்ப ஆரம்பித்தார். கிறிஸ்தவ ஒழுக்க நெறிக்கும் இம்மக்களில் ஊன்றியிருந்த பழக்கமும், முரண்பட்டதாய் இருந்தன. இவர்களுக்கு சவாலாகப் பிரிவினை-கிறிஸ்தவரும் போட்டி போட்டனர்.

ஆயினும் பசிநோக்காது, கண்துூங்காது காடுகள், குன்றுகள் கடந்த நீண்டபயணங்களும், தொடர்ச்சியான மறையறிவூட்டலும் அவரது வாழ்க்கையின் வெற்றிப்படிகளாயின.

இல்லத்தரிசிப்பும், நோயாளர், முதியோர் போன்றவருக்கு வழங்கிய பராமரிப்புப் பணியும், இளையோர் கல்வியிலும் பண்புருவாக்கத்திலும் செலுத்திய அக்கறையும் பணியை மெருகூட்டிக் கொண்டிருந்தன.

வெற்றியினதும், வளர்ச்சியினதும் இரகசியம். ஓயாத வேலைப்பழுவின் மத்தியிலும் இரவின் பெரும் பகுதியைச் செபத்தில் செலவுசெய்தார். "செபம் அவரது உணவாயிற்று"

இவர் தனது தாய்நாட்டையும், சொந்த பந்தங்களையும், துறந்து மிஷனறியாகச் சென்றவர். தனது 61 ஆண்டுப் பணிவாழ்விலும், மீண்டும் ஒருமுறையேனும் தனது தாயகம் திரும்பிச்செல்லவில்லை.

"அன்புள்ளம் கொண்டவருக்கு முழு உலகமும் சொந்தம்" என்பது இவரது விருதுவாக்கு. இறைவனின் சந்நிதானம் இவரது தாயகம் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. இவர் பெயரால் பல புதுமைகள் நடைபெறுகின்றன. புளோறினு என்ற சிறுமி 1928 இல் தனது ஆருவது பராயத்தில் தன் கண்பார்வையை முற்றிலும் இழந்தவள் பிதா ஜெராட் அடிகளாரின் நவநாள் செபத்தினுல் கண்பார்வை பெற்ருள். இன்று லெசத்தோ நாடு இலட்சக்கணக்கான கிறிஸ்தவரையும், நூற்றுக்கணக்கில் குருக்கள், துறவியர்களைக் கண்டு மகிழ விசுவாச வித்தைத் தூவியவர். இறைவனில் தகுதி வாய்ந்த முத். யோசவ் ஜெராட் அடிகளாரே. இவர் பரிந்துரைகள் எமக்கும் கிடைக்கவும், இவரைப் புனிதர் வரிசையில் இறைவன் உயர்த்திடவும் இவர் வழியாக இறைஞ்சுவோம்.

—அற்புதருஜா அ.ம தி.

# உருவாக்கத்தின் பருவ காலங்கள்

ஒருவர் நீடிய கால, கடின பயிற்சியின் ஊடாகவே அமலமரித் தியாகியாகிருர். அமலமரித் தியாகிகளின் உருவாக்கத்தில் நான்கு கட்டங்கள் உண்டு, அவை சிறிய குருமடம், ஆரம்ப நவ சந்நியாசம், நவ சந்நியாசம், பெரிய குருமடம் எனப்படும். ஒவ்வொரு கட்டத்திலும் அளிக்கப்படும் பயிற்சியில் நான்கு முக்கிய அம்சங்கள் உண்டு, அவை அறிவு, ஆளுமை, ஆன்மீகம், மேய்ப்புப் பணி சார்ந்தவையாகும், முன் கூறப்பட்ட நான்கு கட்டங்களிலும் இந்த நான்கு அம்சங்களும் பயிற்றப்பட்டாலும், வெவ்வேறு கட்டங்களில் வெவ்வேறு அம்சங்கள் சிறப்பிடம் பெற்று, வலியுறுத்தப் படுகின்றன.



'வசந்தகம்' ஆரம்ப நவசந்நியாச நிறுவனம் கொழும்புத்துறை.

**சிறிய குருமடம்:-**

அமல மரித்தியாகிகளின் சிறிய குருமடம் கொழும்புத் துறை, சுவாமியார் வீதியில் உள்ளது. அமல மரித்தியாகிகளாக விரும்பும் மாணவர்கள் நேர்முகப் பரீட்சை வழியாக இங்கு அனுமதி பெறுகிருர்கள். இந்நிலையில் அவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியில், அவர்களின் அறிவு வளர்ச்சிக்கும், ஆளுமை வளர்ச்சிக்கும் சிறப்பிடம் அளிக்கப்படுகின்றது. க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவர்களுக்கு உலக கல்வி ஊட்டப்படுகின்றது. அத்துடன் பெரிய குருமடத்தில் ஆங்கில மொழியில் மெய்யியல் கற்கப் போதுமான அளவிற்கு ஆங்கிலமும் கற்பிக்கப்படுகிறது. மேலும் ஒருவரின் ஆளுமையை வளர்ப்பதற்கு இதுவே தகுந்த பருவம். எனவே மாணவர்கள் தம்மில் தலைமைத்துவப் பண்புகளையும், குழு வாழ்விற்கு ஏதுவான நற்பண்புகளை வளர்க்கவும், தம் வேறுபட்ட திறன்கள், ஆற்றல்களை வளர்க்கவும் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன. அடிப்படை ஆன்மீகப் பயிற்சியும் சிறிதளவு மேய்ப்புப்பணி அனுபவமுமே இந்நிலையில் கொடுக்கப்படுகின்றன.

**ஆரம்ப நவ சந்நியாசம்:-**

அ. ம. தி. யின் ஆரம்ப நவ சந்நியாச மடமும் கொழும்புத் துறையிலேயே உள்ளது. க. பொ. த. உயர்தரப் பரீட்சையிலும்' பெரிய குருமட அனுமதி ஆங்கிலப் பரீட்சையிலும் சித்தியடைந்தவர்கள் இங்குஏற்றுக் கொள்ளப்படுகின்றனர். இங்கு அளிக்கப்படும் பயிற்சி மூன்று வருடங்களுக்கு இடம் பெறும். இக்கட்டத்தில் குருமாணவர்களின் அறிவு வளர்ச்சியும் ஆன்மீக வளர்ச்சியும் சிறப்பிடம் பெறுகின்றன. இங்கு அவர்கள் மெய்யியல் பயின்று தேர்ச்சி பெறுவர். ஆன்மீகம், சந்நியாசம் பற்றிய தெளிவான அறிவு பெற்று, அவற்றை வாழ்வதற்குப் படிப்படியாக இட்டுச் செல்லப்படுகிருர்கள், தம்மையும் தம் குணவியல்புகளையும் தெளிவாக அறிந்து, தம் தேவ அழைத்தலைப் பற்றித் தீர்மானிப்பார். இங்கு அவர்கள் ஆளுமையும், உளமும் முதிர்ச்சி பெறவும், ஓரளவு மேய்ப்புப்பணி பற்றிய அனுபவம் பெறவும் சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுகின்றன.

**நவ சந்நியாசம்:-**

அமலமரித் தியாகிகளின் நவ சந்நியாச மடம் பண்டாரவளையில் உண்டு. இங்கு அவர்களுக்கு ஒரு வருடம் பயிற்சியளிக்கப்படுகிறது. இந்நிலையில் ஆன்மீக ஆளுமைப் பயிற்சிகள் முன்னுரிமை பெறுகின்றன. இங்கு அவர்கள் துறவற வாழ்வின் இயல்பையும் அதில் எதிர்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதையில் காணும் மைல் கற்கள்

**1846** இத்தாலிய தியான சபைக் குருவான ஓரசியோ பெற்றக்கினி இலங்கையின் வடபாகத்து ஆயராக நியமிக்கப்பட்டார். அப்போது அங்கு வயதுபோன 6 கோவைக் குருக்களும் சுதேச மொழிப் பயிற்சி குறைந்த 4 ஐரோப்பிய குருக்களுமே பணிபுரிந்தனர். எனவே, நற்செய்தி போதிக்கக் கூடிய குருக்களையும் ஆங்கிலம் கற்பிக்கத் தகுந்த ஆசிரியரையும் அழைத்துவர அவர் **1847-ல்** ஐரோப்பா சென்றார். அங்கு இத்தாலியிலும் இங்கிலாந்திலும் அலைந்து தேடிக் கிடைத்தவர் ஏர்மினியே குவிடி என்ற குரவர் மாத்திரமே.

கடைசியாக, அவர் பிரான்சில் மார்சேல்ஸ் ஆயரான யூஜின் டி மசினட்டிடம் சென்றார். இவர் அண்மையிலேதான் கனடாவில் வேதபோதக வேலையை ஏற்றிருந்தார். ஆதலால் ஆள் வசதியில்லையென்று சொல்லிவிட்டார். எனினும், ஆயர் பெற்றக்கினி இலங்கையின் பரிதாப நிலையை விபரித்தார், வாதாடினார், இரந்தார், அறுவடைக்கு ஆயத்தமான விளைநிலம் இங்குண்டு என்று புகழ்ந்தார். ஆன்மாக்களின் மீட்பு, திருச்சபையின்விருத்தி, கடவுளின் மகிமை என்றதால் மசினட் ஆண்டகை மனம் மாறி அவசிய அலுவல்களினின்று நாலு பேரைப் பிடுங்கி எடுத்து அவருடன் அனுப்பினார்.

**1847** கார்த்திகையிலே இவர்கள் காலித்துறைமுக மடைந்து 1848 தையிலே யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர். ஆயர் பெற்றக்கினி கொழும்பு ஆயர் கயித்தானு அந்தோனியோவுக்கு உதவியாகவும் இயங்கியதால் 1849 ஆவணி மட்டும் மறைப்பணியின் பல பொறுப்புக்களும் சுவாமி செமேரியா மேலே சுமந்தன. கத்தோலிக்கருடைய தேவைகளைக் கவனிப்பது அவசியமாயிருந்ததால் மசினட் ஆண்டகையுடைய ஆசைப்படி பிற மதத்தாரிடையே நற்செய்தியை உடனே போதிக்க முடியவல்லை.

**1857-ல்** ஆயர் பெற்றக்கினி இறந்தபோது உதவி ஆயராயிருந்த ஸ்ரிவின் செமேரியா வடபாகத்தைப் பொறுப்பேற்றார். பழைய சமய தாபனங்களெல்லாம் புத்துயிர் பெற்றன பொன்சான், சூணெவல் போன்ற குருக்களின் தலைமையில் ஞானொடுக்கம் பலவிடங்களிலும் போதிக்கப்பட்டு ஞானவாழ்வு வலுவடைந்தது.

**1859-ல்** அயர்லாந்திலிருந்து உதவிச் சகோதரர் பிறவுண், பைறன் என்போர் வந்து ஆங்கிலக் கல்விக்குத் தரமளித்தனர். பொன்சான் அடிகள் அரசாங்கத்துடன் வாதாடி அதன் உதவியையும் அதிகரிக்கச் செய்தார்.

**1862-ல்** திருக்குடும்பச் சபைக் கன்னியர் இலங்கையில் அடி எடுத்துவைத்தனர். திருமதி, விளனகன் நடத்திய பெண்களின் ஆங்கில பாடசாலையும் அனாதைகள் இல்லமும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. திருமதி, விளனகன் திருகோணமலை சென்று ஆங்கில பாடசாலை தொடங்கினார்.

**1861-ல்** சுவாமி பொன்சான் ஆண்களுக்கு அநாதை மடம் தொடங்கினார்.

**1864-ல்** இவர்களைக் கண்காணிக்கவும் ஆசிரியப் பணியில் ஈடுபடவும் புனித சூசையப்பர் துறவிகள் சபையைத் தொடங்கினார்.

**1868-ல்** ஆயர் கிறிஸ்தோப்பர் பொன்சான் பொறுப்பேற்றார். ஆயர் செமேரியாவின் வலக்கரமாக இயங்கிய இவர் போதக பணியிலும் கல்வித் துறையிலும் புதுமெருகேற்றினார். ஞானொடுக்கங்களும் சுற்று நிருபங்களும் பெருகின. கற்கோவில்களும் பாடசாலைக் கட்டிடங்களும் மலிந்தன.

**1876-ல்** 'பாதுகாவலன்' பத்திரிகை தொடங்கியது. 1870ல் கிடைத்த அச்சியந்திரம் 1873ல் அழுத்தகமாக உருப்பெற்றது. 1863ல் கொழும்புத்துறைக்கு மாற்றப்பட்ட அனாதை மடம் ஆயர் பொன்சானுடைய கரிசனையால் விரிவடைந்தது.

**1881-ல்** ஆங்கில பாடசாலை புனித பத்திரிசியார் கல்லூரியாகப் பரிணமித்தது. சுவாமி சிமைத் அதின் முதல் அதிபரானார்.

**1869-ல்** குரு மாணவர் மடம் ஆயர் இல்லத்திலே தொடங்கியது. 1878ல் வடக்கேயுள்ள மூயாட் வளவுக்கு மாற்றப்பட்டது.

**1870-ல்** புதிய ஆயர் இல்லம் கிழக்கில்வாங்கியகாணியிலே கட்டப்பட்டது. மரியன்னையின் மகிமையைப் பரப்பும் யாத்திரைத் தலமான மடுப்பதி பல இடையூறுகளிடையே புனருத்தாரணம் செய்யப்பட்டு **1872-ல்** புதிய ஆலயம் தொடங்கியது. 1876ல் மாதாவின் முடிசூட்டுவிழா நடந்தேறியது.

**1877-ல்** 78ல் கடும் பஞ்சமும் கொள்ளை நோயும் மக்களை வாட்டின. ஆயர் பொன்சான் பொருட்களை விற்றும், தருமங்கள் பெற்றும் பலருக்கு உணவும் மருந்தும் அளித்தார். குருமார் காட்டிய பிரறன்பும் பரித்தியாகமும் பலரைக் கவர்ந்தன. அநேகர் வேத உண்மைகளைக் கற்றுத் திருச்சபையிலே சேர்ந்தனர். இவ்வாறு பல பணிகளும் சிறப்பாக வளரும்வேளை ஆயர் பொன்சான் கொழும்புக்கு மாற்றப்பட்டார். அங்கும் அவர் இங்குபோலவே பல ஆக்க வேலைகளைத் திட்டமிட்டுச் செய்தார்.

**1883-ல்** ஆயர் பொன்சானுடன் 15 வருடமாக உழைத்து அனுபவம்பெற்ற ஆயர் அன்றூ மெலிசான் அப்போஸ்தல பிரதிநிதியாகப் பொறுப்பேற்றார். அவருடைய திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றினார். புனித மாட்டீன் குருமடம் புதியதோர் மாடிக் கட்டிடத்தைப் பெற்றது. பாடசாலைகள் விரிவாக்கப்பட்டன. கத்தோலிக்க நூலகம் உருவானது. பல பக்திச்சபைகள் தொடங்கி இயங்கின; 1886ல் இலங்கை மூன்று மறைவட்டங்களாகப் பிரிபட்டு ஆயர்மன்றம் தாபிக்கப்பட்டது.

**1893-ல்** ஆயர் மெலிசான் மாற்றமாகிக் கொழும்புக்குச் சென்றபோது ஆயர் என்றி யூலேன் பொறுப்பேற்றார். இவர் **1880-ல்** இங்குவந்து நிறையனுபவம் பெற்றவராதலால் தனது முன்னோடிகளின் தடத்திலே பணியைத் தொடர்ந்தார். 1893 ஆவணியில் திருத்தந்தை 13-ம் சிங்கராயர் இலங்கையில் இரண்டு புதிய மறைவட்டங்களை நிறுவினார். இந்த ஒழுங்கு அமுலாக 2 வருடங்கள் சென்றன. இதனால் யாழ்ப்பாண மறைவட்டம் கத்தோலிக்க சனத்தொகையில் அரைவாசியை இழந்தது. ஆயினும் அவருடைய நீண்ட 26 வருட ஆட்சியில் அதை ஈடு செய்ய முடிந்தது.

M. பாவிலுப்பிள்ளை மா. ம. தி.

15 வருட காலம் நீடித்த மாதோட்டப் பிரிவினை 1902-ல் முடிந்தது. யாத்திரைத் தலங்களை விசுவாசப் பரப்புதல் மையங்களாகத் திருத்தியமைத்தார்.

**1904-ல்** இந்து மதத்தவரிடையே சத்திய வேதத்தைப்பரப்பச் சுவாமி ஞானப்பிரகாசர் பொறுப்பிலே நல்லூர் மீசாமை நிறுவினார். பக்திக் கூட்டங்களும் பெருகி வளர்ந்தன. சூசையப்பர் சபைச் சகோதரரும் இராயப்பர் சபைக் கன்னியரும் பலவிடங்களிலும் பாடசாலைகளை நிர்வகித்தனர். சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்காக உழைக்க வேறு சபைகள் உருவாயின. உயர் கல்விக்காக அருட்திரு. டன், மத்தியுஸ் போன்றோர் அரும் பாடுபட்டனர். பாதுகாவலன் பத்திரிகை இருமொழிகளிலும் வெளியாகி வேத, உலக அறிவை வளர்த்தது. கத்தோலிக்க இலக்கியம் பெருகியது. அரசாங்கத்திடம் காடு வாங்கித் தென்னந் தோட்டங்கள் உண்டாக்கினர். வருங்கால தேவையை உணர்ந்து பலவிடங்களிலே இரண்டு ஏக்கர் நிலம் வாங்கித் தங்குதலமாகப் பாவித்தார்.

**1920-ல்** பொறுப் பேற்ற ஆயர் அன்றூ புறூ மூன்று வருடங்கள் மாத்திரமே பணிபுரியலானார். இச்சிறு கெடுவில் அவர் வகுத்த திட்டங்களும் செய்த சாதனைகளும் அவருடைய திறமைக்குச் சான்றாகும். யுத்த காலத்தில் நிலைகுலைந்துபோன பொருளாதாரத்தை செவ்வைசெய்ய முயன்றார். பக்தியை வளர்க்கப் பலகொண்டாட்டங்களைப் பாவித்தார். பலதுறைகளிலும் விற்பன்னராய் விளங்கிய அவர் 1923-ல் மாரடைப்பினால் மறைந்தபோது பலரும் பிரலாபித்தனர்.

**1924-ல்** அயர் அல்பிறெற் கியோமார் பதவியேற்றார். இவருடைய 26 வருடமும் இவரைத் தொடர்ந்த ஆயர் யெறோம் எமிலியானுஸ் பிள்ளையின் 22 ஆண்டுகளும் **1950-72** அண்மைக் காலக் கதையே. இரு உலக யத்தங்களின் பின் எழுந்த அரசியல், பொருளாதார, கல்வி, சமய சிக்கல்களூடாக இவர்கள் யாழ். திருச்சபையை வழி நடத்திச் சென்றனர். எதிர்கால தேவைகளை முன்வைத்து விசுவாசிகளைத் தயார் செய்தனர். இதன் விளைவாக இன்று இலங்கையில் கத்தோலிக்க நிர்வாகம் பெரும்பாலும் மறைவட்டக் குருக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

**1972** மார்கழியில் திருகோணமலை உதவி ஆயர் வ தியோகுப்பிள்ளை யாழ். ஆயராக நியமிக்கப்பட்டார். இதையே மாமரித்தியாகிகளின் மறைப்பணியின் மகுடமெனலாம். பொறுப்பு முடிந்தாலும் பணிமுடியவில்லை. மீட்பரை அறியாத ஒரு மனிதன் நம்மிடையே இருக்குமட்டும் நற்செய்தி நவிலும் வேலை தொடரவேண்டும். பங்குத்தளங்களிலும் கல்வித் தாபனங்களிலும் முன்னர் போலவே செய்த சேவை தொடர்கிறது.

வருங்கால பணிக்கு வேண்டிய ஆயத்தங்கள் சில ஏலவே செய்யப்பட்டன.

**1961-ல்** அமலோற்பவம் எனும் ஞானொடுக்கப் போதகர் இல்லம் கொழும்புத்துறையிலே தொடங்கியது. அங்கிருந்து முழுநாட்டிலுமுள்ள தமிழ் பேசும் கத்தோலிக்கரின் அழைப்புக்கு அமைந்தனர். அந்த ஊழியம் தொடர்கிறது. 1970-ல் மாமரி தியாகிகள் சபைக்கு அழைத்தல்களை ஊக்குவிக்கும் பொருட்டுப் புனித சூசையப்பர் குருமடம் கொழும்புத்துறையிலே தொடங்கியது. அதைத் தொடர்ந்து உயர்கல்வி நிலையமும் உருவாகி வருகிறது.

**1982-ல்** நமது நாட்டுக் கல்வி கலாச்சாரத்தைப் பேணி வளர்க்க ஞானப்பிரகாசர் நூல்நிலையமும், நவீன முறையில் நற்செய்தி நவிலத் தொடர்பகமும் தொடங்கின. காலத்தின் கிலி கோலத்தால் அவற்றின் பணி குழம்பின போதிலும் நடைபெற்றுக் கொண்டேயிருக்கிறது.

**1984** மார்கழி8-ல் யாழ்ப்பாண நியமனம் தாபிக்கப்பட்டது 1929-ல் இலங்கை அரசியலிலெழுந்த அதிகார ஆக்கிரமிப்புத்திட்டம் 1956-ல் அநீதி அடக்குமுறையாக மாறியது. கலகமும் அழிவும் தொடர்ந்தன. அதனால் தமிழ் மக்களிடையே சமயப்பணி சுனிமுகாமையின் கீழே திட்டமிட்டு நடைபெற வேண்டியது அவசியமாயிற்று. காலத்துக்குத் தக்க கோலத்திலே யுத்தம் செய்தால் மாத்திரமே சித்திபெறலாம். அதிகாரிகளின் ஆசியுடன் அதைச் செய்வதே முறை. மாமரி தியாகிகளின் சபை அதிபர் மார்செல்லோ சாகோ அடிகளின் சந்திப்பும் இச் சிக்கலான சமயத்தில் உதவியும் உற்சாகமும் அளித்து நமது சேவையைச் சிறப்பிக்கும் என்பது உறுதி.

## உயர்தலைவரின் யாழ். சந்திப்புக்கள்

| | |
|---|---|
| ★ 20-08-89 ஞாயிறு | யாழ் வரவு |
| ★ 21-08-89 திங்கள் | குருமடம், நிறுவனங்கள் சந்திப்பு |
| ★ 22-08-89 செவ்வாய் | பங்குகள் தரிசிப்பு |
| ★ 23-08 89 புதன் | அமதிகள் பொதுக்கூட்டம்-காலை 9-00மணி யாழ் பேராலயத்தில் கூட்டுத்திருப்பலியும், பொது வரவேற்பும்-மாலை 4-30 |
| ★ 24-08.89 வியாழன் | மறைவட்ட குருக்கள் கூட்டம்-காலை 10 மணி துறவறசபையினர் கூட்டம்-மாலை 4-30 மணி |
| ★ 25-08-89 வெள்ளி | பல்கலைக்கழகம்—கலந்துரையாடல் |
| ★ 26-08.89 சனி | பிரியாவிடை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1990களில் அமதிகள்

கரவையூர் செல்வம் அ. ம. தி.

அமல மரித்தியாகிகள்சபை துவக்க காலந் தொடங்கியே ஓர் "அனுப்பப்பட்ட (Missionary) குழுவச யத்தை தமது சிறப்பான கொடையாகக் கொண்டு வளர்ந்த ஒரு துறவறசபை. உலகில் மக்களோடு மக்களாக வாழ்ந்து மக்களுக்காக சேவை செய்யும் ஒரு துறவறம் இவர்களுடையது. தம்மையே அறிந்து ஏற்றுக் கொண்டு, ஒரு முழுமையான மனித வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்தியவாறே அதைப் பணியாக்கும் ஒரு புதிய துறவறம் இது.

காலங்கள் மாறிவிட்டன. மறைவட்டம் தன்னிறைவு கண்டு வளர்கின்றது. அமதிகள் பங்குத் தளங்களில் பணிபுரிய வேண்டிய தேவை குறைந்து வருகின்றது இந்நிலையில் தங்கள் எதிர்காலம் நோக்கி சிந்திக்கத் தூண்டப்பட்டுள்ளார்கள். அமதிகள் இவற்றைப் பின்னணியில் வைத்தே வரும் ஆண்டு கார்த்திகைத் திங்களில் அமதிகள் மாநாடு தொடர்பகத்தில் நடைபெற உள்ளது.

எதிர்காலத்தை எட்டிநோக்கும் வேளை இறந்த காலப் பின்னணியில் நிகழ்கால நிகழ்வுகளையும் அவற்றின் வருங்கால விளைவுகளையும் ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். மக்களின் தேவைகள் அடையாளங் காட்டப்பட்டு, அவற்றையே சவால்களாக ஏற்று சந்திக்கும் பொழுது பணிகள் பல பிறக்கும். இப்பணிகள் புதுத் துறைகளுக்கும், புதுப் பணிக் களங்களுக்கும் எம்மை அழைத்துச் செல்லலாம்.

புதிய சவால்கள்—புதிய களங்கள் ?

இப்படி மனித பிரச்சனைகள் தலைவிரித்தாட மதச் சடங்குகளுக்குப்பின்னால் நாம் ஒழிந்து கொள்வோமா ? இல்லை, இப் புதிய சவால்களை நேராகச் சந்தித்து பணிபுரிந்து அப்பணியையே எமது திருச்சடங்காக்கி திருவருட்சாதனமாக்குவோமா ?

உளவளத்துணை:

அமதிகள், உளவளத்துணை (ஆற்றுப்படுத்தல்) போன்ற துறைகளில் தமது கவனத்தைச் செலுத்தி மக்களோடு அவர்களது பயணத்தில் இந்த சோகமான ஒரு முக்கிய திருப்பு முனையில் துணைப்பயணிகளாவார்களா ?

பல்வேறு வகையில் தாக்கப்பட்ட எமது மக்களுக்கு உளவியல் வழிநின்று அவர்களுக்கு உளநலன் அளிக்க அமதிகள் முன்வருவார்களா? ஒரு சமூகத்தின் ஆணிவேர் ஒரு குடும்பம் என்றுணர்ந்து, திருமணத்திற்கு ஆயத்தம் செய்வோர், தம்பதிகள், குடும்பத்தினர் என்ற மூன்று மட்டத்திலும் மக்களின் ஒரு முழுமையான மனித வளர்ச்சிக்கு வழிகோல முடியாதா?

அமதிபுரங்கள்

புதிய அமதி புரங்கள் அமைத்து அநாதைச் சிறுவர்களுக்கு அன்னையும் பிதாவுமாகி அன்பையும் அரவணைப்பையும் அளித்து பெற்றோர் இல்லாத பெருங்குறையை ஓரளவாவது நிறைவு செய்வார்களா? தொழில் நோக்கிப் பயிற்சிக் களங்கள் அமைத்து முழுமையான ஒருங்கிணைந்த (interprated) கல்வியை இளைஞர்களுக்குக் கொடுப்பார்களா?

இளைஞர்கள்

ஒரு சமூகத்தின் நரம்பு அச்சமூகத்தின் இளைஞர்களே என்ற கூற்றை ஏற்று, ஒரு தலைமுறை இளைஞர்களை நாம் பெருமளவில் இழந்துவிட்டோம் என்ற உணர்வில், இன்றைய இளைஞர்களை நெறிப்படுத்தி நேர்ப்படுத்தி சுயமாக சிந்திக்கவைத்து அவர்கள் சமூக உணர்வு கொண்டு மனிதபிமானத்துடன் வாழ்ந்து வளர அமதிகள் வழிவகுப்பார்களா?

தொடர்புகள்

சமூகத்தொடர்புச் சாதனங்களை- பத்திரிகை, சஞ்சிகை, ஒலி- ஒளி அமைப்பு- நன்கு பயன்படுத்தி வாழ்விழந்து கிடக்கும் தமிழ்ச் சமூகத்தை விழித்தெழ வைப்பார்களா, அ. ம. தி. கள்? சமூக உணர்வுகொண்டு புதிய சமூகங்களை கட்டியெழுப்ப இவர்கள் கைகொடுத்து உதவுவார்களா? தொடர்புச்சாதனங்கள் மனித தொடர்புகளை வளர்த்து மனித உறவுகளை உருவாக்கவேண்டும். இந்த உறவுகளின் மூலம் சமூகங்கள் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

ஆன்மீகம்

திருவிழாக்களில் திருவுரையுடன் மட்டும் நின்றுவிடாமல், பட்டி தொட்டியெல்லாம் ஓர் ஆன்மீகப் புரட்சியை உருவாக்கி வளர்க்க அ. ம. தி. களின் போதகர் குழு முன் வருமா?

சபைகளின் இணைப்பு

சபைகள் தோறும் திறமைகள் உண்டு, வசதிகள் உண்டு, வளங்கள் உண்டு. சமூகத்தின் அடிப்படைத்தேவைகளில் ஒற்றுமை ஒன்று- என்ற உணர்வில், துறவிகள் ஒருங்கிணைந்து பல பணிகளில் செயற்பட முடியாதா? எங்கள் இராய்ச்சியங்களைக் கட்டியெழுப்பாமல், அன்பின் ஆட்சியைப் பரப்பலாமா?

வடகிழக்குப்பகுதியில் மிகப் பெரிய ஆண்கள் துறவற சபையாக இயங்கிவரும் அ. ம. தி. கள் ஒரு தனித்துவமான தலைமைத்துவத்தை ஏனைய துறவற சபைகளுக்கு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நிறுவனங்களை மீறி

நிறுவனங்களாக்கப்பட்ட மதங்களை வெறியுடன் வளர்க்காமல், மதங்களின் உண்மையான நோக்கங்களின் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு நிறுவனங்கள் அமைப்புகளுக்கப்பால் மக்களை ஒன்றிணைத்து வளர்க்கும் வழிவகைகளை மதவாதிகள் தேட அ. ம. தி. கள் களம் அமைத்துக் கொடுப்பார்களா?

குருக்கள், துறவிகளுக்கும்

குருக்கள் துறவிகளுக்கும்- அவர்களின் முழுமையான மனித- ஆன்மீக வளர்ச்சியில் அ. ம. தி. கள் உளவள ஆன்மீகத் துறைகளில் துணைநிற்பது பெரும்பணியல்லவா?

முதியோர்

காலத்திற்கு முன்னரேயே காளைகள் கொலைப்பட, ஒரு தனிமையான வயோதிபத்தை எமது முதியோர் விரைவாக எய்தி வருகின்றனர். இவர்கள் தங்கள் வாழ்வில் ஓர் அமைதியைக்காண ஆறுதல் அடைய அ. ம. தி. கள் என்ன செய்யலாம்?

விரியும் எல்லைகள்

யாழ். மன்னார் மறைவட்டங்கள் என்ற எல்லைபோட்டுத் தேங்கி விடாமல், மட்டுநகர்— திருமலை, பதுளை, கண்டி, இன்னமும் எங்கெங்கு எங்கள் சேவை புதிய துறைகளில் புதிய களங்களில் தேவைப்பட அங்கெல்லாம் நாம் செல்வோம். ஏனெனில், நாம் "அனுப்பப்பட்டவர்கள்"

இது ஒரு தொடர்ப் புரட்சி:

போர் விளைவுகள் பல இன்று விளைக்களாகின. அமதிகள் 90 களில் இவ் விளைக்களைப் பணியாக்கிப் பதிலாக்குவார்களா? என்றும் ஒரு தீர்க்கதரிசனப் பார்வையுடன் சமூகத்தை நோக்கவும், அங்கு மக்களின் உடனடித் தேவைகளை அடையாளங் கண்டு காட்டவும், புதிய சவால்களை சந்திக்கும் சக்தி பெற்று வாழவும் அமதிகள் தம்மையே தாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் அன்புப் புரட்சியை ஒரு தொடர் புரட்சியாக்கி, வாழ்விழந்து வரும் தமிழ்ச் சமூகத்திற்கும் மறுமலர்ச்சி அளிக்க வேண்டும் அமதிகள். இவர்கள் இப்படிப்பட்ட பிரச்சனைகளுக்கு "அனுப்பப்பட்டவர்கள்" அல்லவா ?

---

## யாதும் ஊராம் ......

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வீதம், மக்களும் 85 வீதம் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களும் வாழும், பரந்துபட்ட ஆசியாவிலும் பாரத உபகண்டத்திலும் பங்களாதேஸ் பாகிஸ்தானிலும் வேதபோதகர்களாக தங்கள் வாழ்வை முழுமாக அர்ப்பணித்திருக்கின்றார்கள். இந்தியாவில் கோயில்கள் குடிகொண்டிருக்கும் காஞ்சிபுரம் பூந்தமல்லி, பேரம்பாக்கம் பங்களூர், விஜயவாடாவிலும், பங்களதேஸ்சில், காரோகாசிபோன்ற ஆதிவாசிகள் வாழும் கானகத்திலும், பாகிஸ்தானில் கராச்சி, முல்டான், ராங்பூர், கொஜாரா போன்ற தாழ்த்தப்பட்டோர் மக்கள் வாழும் பகுதிகளிலும், எமது யாழ். மண்ணின் மைந்தர் அருள்குருக்கள் சமரக்கோன், திருச்செல்வம், ரூசாய்ரோ, மொராயஸ், விக்டர், தியோஜினஸ், டெம்சி, அந்தோனிப்பிள்ளை இன்றும் வேறு பலரின் ஆன்மீகப்பணி சிறப்புறுவது எமது பெருமையாகும். மாசற்ற மரியாளின் பாதுகாப்பும், பராமரிப்பும், இவர்களுக்கும் கிடைப்பதாக.

---

## வரலாற்றுச் ......

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருமறையில் சேர்த்தார். மருத்துவப் பணியில் அதிக ஈடுபாடுடைய இவர் மக்களுடன் தொடர்பு கொள்ளவும் அவர்களுக்கு சிறந்த சேவையாகவும் மருத்துவ சேவையையே கருதினார். அதை சிறப்பாகச் செய்தும் காட்டினார்.

சுவாமி ஆசிர்வாதம்

திருப்பணியாளரும், மறையுரையாளருமான இவர் சிறந்த எழுத்தாளனுமாவார். இவருக்கும் மக்களுக்கும் அடிக்கடி தகராறுகள் ஏற்படினும் மக்களால் அன்பு செய்யப்பட்டவராக விளங்கினார்.

அருள்திரு மருசலின் அடிகளார்

இவர் ஒப்புயர்வற்ற மறை பரப்பாளர். சிலவேளைகளில் ஒரு மணிநேரம் கூட சுவைகுன்றாது உரையாற்றுவார். மறைக்கல்வி கற்பிப்பதில் வல்லுனர். சிறுவர்களுக்குப் பயன்படக்கூடிய மறைநூல்களை ஆக்கித் தந்துள்ளார்.

—பொன்சியன்

---

## முத்திப்பேறுபெற்ற ...

3ஆம் பக்கத் தொடர்ச்சி)

லும், அவர் ஊர் மாறி ஊர் சென்றதனால் அவர் தனது அனுபவ அறிவையும், பரந்த உள்ளத்தையும். வளர்க்கப் பின் நிற்கவில்லை.

1808 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் பன்னிரெண்டாம் நாள் சள்பிஸ் குருமடத்தில் காலடி எடுத்து வைத்து, 1811 ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் இருபத்து ஓராம் நாள் இறைவனின் பரிசுத்த குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

1831ல் இருந்து 1861ம்ஆண்டு அவர் இறக்கும்வரை திருச்சபைக்குப் பல அரியபெரிய செயல்களைச் செய்தார். மனித பெலவீனங்களோடு ஒரு மனிதனாக, இலட்சிய நோக்கோடு ஒரு புரட்சி வீரனாக, சமுதாய உணர்வுகளோடு ஒரு தியாகியாக, பணி வாழ்விலே ஒரு புனிதனாக வாழ்ந்த ஆயர் மசெனட் அவர்களை 19-10-75ல் புனிதர்களின் வரிசையிலே சேர்க்க அன்னையாம் திருச்சபை அவருக்கு முத்திப்பேறுபட்டம் வழங்கியது.

எட்வின் வசந்தருஜா அ. ம. தி

---

## உருவாக்கத்தின்

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளக்கூடிய சவால்களையும் தெளிவுடன் கற்று. அவ்வாழ்வை வாழ்ந்து அனுபவிப்பர். இங்கு அவர்கள் செபத்தில் நெடுநேரம் ஈடுபட்டு இறைவனையும் இறை அன்பையும் சுவைத்து அதற்குப் பிரதியுபகாரமாகத் தம்மையே இறைவனுக்கு அர்ப்பணிக்க முன்வருவர். இந்நிலையில் அவர்கள் தம் சபையின் வரலாறு அதன் தாபகர், அவருடைய அருங்கொடை பற்றிய அறிவையும் பெறுவர். குழுவாழ்விற்குரிய சகல பண்புகளையும் வளர்த்து ஆளுமையில் [illegible] பெறுவர். மேய்ப்புப் [illegible] லும் அனுபவம் பெற ஓரளவு சந்தர்ப்பம் கிட்டும். இவ்வோராண்டுப் பயிற்சி முடிவில், கற்பு ஏழ்மை, அமைச்சல், நிலைநிற்றல் என்ற வார்த்தைப்பாடுகளால் தம்மை முழுவதும் அர்ப்பணம் செய்து, ஒரு அமல மரித் தியாகி ஆவார்.

பெரிய குருமடம்:-

அ. ம. தி. யில் பெரிய குருமடம் கண்டி, அம்பிற்றியாவில் உள்ளது. இங்கு அவர்களுக்கு நான்கு வருடம் பயிற்சி அளிக்கப்படும். இக்கட்டத்தில் அளிக்கப்படும் பயிற்சியில் அறிவும் மேய்ப்புப் பணியும் சிறப்பிடம் பெறுகின்றன. இங்கு இறையியல், இறை வழிபாடு வேதாகமம், மேய்ப்புப் பணி போன் [illegible] படும் மேய்ப்புப் பணி பற்றிய கூடிய அனுபவமும், ஆற்றலும் பெறசந்தர்ப்பங்களும் அளிக்கப்படும். தான்மேற்கொண்ட அர்ப்பண வாழ்வைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்து, இறுதியில் தீர்க்கமான முடிவு பெற்று, நிரந்தர வார்த்தைப்பாட்டின் வழியாகத் தம்மை வாழ்நாள் முழுவதுக்கும் அர்ப்பணிப்பர். இறுதியாகத் தம் நீண்ட அறிவு, ஆளுமை, ஆன்மீக மேய்ப்புப் பணிப் பயிற்சியின் பின் ஒரு குருவாகத் திருநிலைப்படுத்தப்படுவர்.

அவர்கள் தம் நீண்ட காலப் பயிற்சியின் பின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டாலும், அவர் பயிற்சி தொடர்ந்தும் நடைபெறவேண்டும். இது தொடர்ச்சியான உருவாக்கம் என்று அழைக்கப்படும். தங்கள் அர்ப்பண வாழ்வின் பிரமாணிக்கத்துடன் நிலைத்து நிற்கவும், தம்பணியில் எதிர் கொள்ளும் சவால்களை எதிர் கொள்ளவும் இது இன்றியமையாதது இதற்குச் செப வாழ்வும், சிறப்புப் பயிற்சியும் இவ்வுருவாக்கத்திற்குத் துணைபோகும் வழிகளாகும்.

மொத்தத்தில் உருவாக்கத்திலும் ஒருவரது ஆழ்ந்த இறையுணர்விலும் உருவாக்கப்படத் தன்னை விட்டுக்கொடுக்கும் திறந்த மனநிலையிலும் தான் தங்கியுள்ளது.

இம்மனுவேல் அ. ம. தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதாகம விஞவிடைப் போட்டி - 27

விடைகளை மாத்திரம் தெளிவாக எழுதி உங்கள் பெயர் முகவரியுடன் 10-9-89 இற்கு முன் பாதுகாவலன் அ. பெ. இல. 2 என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். பரிசு ரூபா 25/-

சரியான விடைகளும் பரிசுபெறுபவர் பெயரும் அடுத்த போட்டியும், 15/9/89 இல் வெளிவரும். விடைகளை 1 சாமுவேல் (15–20)இல் காணலாம்

**விஞக்கள்**

1. ''மனிதன் பார்க்கிறது ஒரு விதம் நாம் தீர்ப்பிடுவது வேறு விதம் மனிதன் வெளிக்குத் தோன்றுபவற்றை மட்டும் பார்க்கிறன். ஆண்டவரோ இதயத்தைப்பார்க்கிறர்'' யாரால் யாருக்குக் கூறப்படடது?

2. கெத் நாட்டாஞகிய கோலியாத் அணிந்திருந்த போர்க்கவசத்தின் நிறை யாது?

3. ''ஆண்டவர் மீட்பது வாளாலும் அன்று, ஈட்டியாலும் அன்று'' யாரால் யாருக்குக் கூறப்பட்டது.

4. மிக்கோல் யாருடைய மகள்? இவள் யாருக்கு மனைவியாகக் கொடுக்கப்பட்டாள்?

5. சவுலும் சாமுவேலுக்கு முன்பாக மற்றவர்களோடு இறைவாக்கு உரைத்தார். இதஞல் இப்பழமொழி வழங்கலாயிற்று அப்பழமொழி யாது?

**சரியான விடைகள்**

(1) சவுலால் மக்களுக்கு கூறப்பட்டது. (2) இடிமுழக்கத்தையும் மழையையும கண்டு (3) சவுல் (4) நேரின் மகன் (5) சாமுவலால் சவுலுக்கு கூறப்பட்டது. (6) சாமுவேல்

போட்டி முடிவுகள் அடுத்த இதழில்

### 1 ஆம் ஆண்டு நினைவு



திரு. சவரிமுத்து இம்மனுவேல் ஐயாத்துரை

மலர்வு: 7-4-1916 மறைவு: 23-8-1988

அன்னரின் ஆன்ம இளைப் பாற்றுக்காக 23-8-89 புதன் கிழமை காலை 8-00 மணிககு சுருவில் அன்னை மரிமாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுககப்படும திருப்பலியில பங்கு கொண்டு அவரது ஆன்ம இளைப்பாறறிககாக மன்றுடும்வாம்க.

பிரிவால் துயருறும
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள, உற்றூர்,
உறவினர்.

### விண்ணக வாழ்வின் ஓராண்டு நினைவு



திரு. அன்ரனி ஜேக்கப்

மலர்வு: 19-10-23 உதிர்வு: 25-08-88

விடி வெள்ளியாய் ஒளி கொடுத்து வழி காட்டியாய் நின்ற எம் தந்தையே! எமைப் பிரிந்து ஓராண்டு சென்றுலும் உங்கள் பூமுகம் எம் உள்ள மதில் நிழலாடுதே — ஐயா!

இறை சந்நிதியில் உங்கள் ஆன்மா இன்பம் பெற இறைவனை — வேண்டுகிறேம்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக உருமபிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் 25-08-89 அன்று மாலை 5மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

நீங்காத நினைவுடன்
மனைவி, பிள்ளைகள் A/177

### விண்ணக வாழ்வின் முதல் வருடக் கண்ணீர் அஞ்சலி

ஜேம்ஸ்
அ. யோ. அருமைநாதன்
(ஆசிரியர்-புனித பத்திரிசியார் கல்லூரி)

பிறப்பு: 8-12-38 இறப்பு: 18-8-88

இரக்கம் நிறைந்த தேவனே! நீர் இவ்வுலகில் இருந்து சடுதியாய் அழைத்துக்கொண்ட உமது அடியான் அருமைநாதனின் ஆன்மாவுககு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
குடும்பத்தினர்,
831, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம். A/174

### 31-ம்நாள்நினைஅஞ்சலி



ஞானமுத்து பிலிப் குமார்

அன்னையின் மடியில்: 17-6-1969 ஆண்டவன் அடியில்: 21-7 1989

# பங்குத்தளங்களில்...

### மன்ஞரில்

மன்ஞர் மாவட்டத்தின் சமூக பொருளாதார நடு நிலையமாகிய வாழ்வுதயத்திஞல் இளம் யுவதிகளுக்கு, பறப்பாங் கண்டல் கன்னியர் மடத்தில் அளிக்கப்பட்டு வந்த ஐந்துமாத கால பயிற்சி வகுப்பின் நிறைவு விழா 8-7-89 இல் நடைபெற்றது. 20 இளம் யுவதிகள் பயிற்சியில் பயன் பெற்ற மகிழ்ச்சியை தம் பெற்றேர், கிராம மக்கள், அருள் தந்தையர்கள், அருட் செல்விகள் அரச அதிகாரிகள் ஆகியோருடன் பகிர்ந்து கொண்டனர்.

பயிற்சிக் காலத்தில் யுவதிகளால் தயாரிக்கப்பட்ட உடைகள், கைப்பணிப் பொருட்கள், அழகிய கேக் வகைகள். உணவுப் பொருட்கள் ஆகியவற்றைக் கொண்டகண் காட்சியை பிரதம விருந்தினராகிய மன்ஞர் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. சீ. செப நாயகம் அவர்கள் சம்பிரதாயப்படி திறந்து வைத்தார். விவசாய திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு. தட்சணுமூர்த்தி, கமநல சேவை உதவி ஆணையாளர் திரு. க கணேஸ், மன்ஞர் மாவட்ட வைத்திய அதிகாரி திரு. சிவபாதசுந்தரம் ஆகியோர் சிறப்பு விருந்தினராக வருகைதந்து மங்கல விளக்கேற்றி விழாவைச் சிறப்பித்தனர்.

உதவிப்பணிப்பாளர் திரு. தட்சணுமூர்த்தி அவர்கள் அடுத்து உரை நிகழ்த்தும் போது தலைமைத்துவப்பயிற்சி பெற்றவர்கள் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்க வேண்டும், எனவும். படித்தவற்றைப் பயன்படுத்தி முன்னேறுயாறும், தமது தணைக்களம சகல வழிகளிலும் உதவத் தயாராக இருககும் எனவும தெரிவததுக் கொண்டார்.

தகவல்:- ஜெயா பாலாஜி

★

### வங்காலையில்

வங்காலையில் புனித ஆனின் திருவிழா ஆடிததிங்கள் 20-ம் நாள் சிறப்பாக நடைபெற்றது.

### ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி. எஸ். றேசாறி பீரிஸ்

மண்ணில் பிறப்பு: 02-07-1926 விண்ணில் பிறப்பு: 22-08-1988

மண்ணினின்று சென்று
மனதினின்று நின்று
மறுமையின்பம் கொண்டு
மறுபடி வாழும் அம்மா!
''இன்பராய் ஈற்றிலே
மோட்சக் கரையிலே
நாம் சந்திப்போம்''

அம்மாவின் ஆன்ம தேற்றத்திற்காக 22-08-1989 செவ்வாய் அன்று காலை 6-00 மணிக்கு இரங்கற்பலியது பேசாலை புனித, வெற்றிநாயகி ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப படும்.

எமமோடு சேர்ந்து பிரார்த்திக்க உங்களை வேண்டுகிறேம்.

அம்மா என்றும்
உங்கள் நினைவாக...

கணவன்: அ செபஸ்தியான் குரூஸ்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்,
உற்றூர், உறவினர்.
பேசாலை
22-08-1989 A/172

''ஜீவியத்தில் என்னை
நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை
மறவாதீர்கள்''

இரக்கமுள்ள எம் இறைவா மரித்த பிலிப்குமாரில் ஆன்மாவை உமது நித்திய வான் வீட்டில் சேர்த்தருளும்

இவரின் பிரிவால் துயருறும்
பெற்றேர், சகோதரர்,
மைத்துனர், மருமக்கள்,
உற்றூர் உறவினர்.
தேவாலயவீதி
மல்லாகம். A/175

### 30-ம் நாள் நினைவாஞ்சலி



பெஞணடோ சுவாமபிள்ளை
மிருசுவில்

பிறப்பு: 8-6-46 இறப்பு: 27-7-89

கருணையின் வள்ளலே நீதியின் தேவனே: இவர் உமக்கெதிராகக் கட்டிக் கொண்ட குற்றங்களை மன்னித்தருள வேண்டுகிறேம்.

இவரி ஆன்ம சாந்திக்காக 25-8-89 காலை 6 மணி. யாழ். அடைக்கல மாதா ஆலயத்திலும், 26-8-89 காலை 6 மணிககு பாசையூர் புனித அநதோனியார் ஆலயததிலும, தோலகட்டி மாதா மேக வலிலும், 6-30 க்கு மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்திலும மாலை 4-30 க்கு புக மாலை ஆரோக்கிய மாதா கோவிலிலும பூசைப்பலிகள ஒப்புக்கொடுக்கப்படும்.

மனைவி - சகோதரர்
உறவினர்கள்.

26-ம் திகதி காலை 7-30 மணியளவில் திருநாள் திருப்பலி மன்ஞர் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு சேவியர் குருஸ் அடிகளார் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக நடைபெற்றது. அன்னை ஆஞளின் திருச்சுருப பவனியுடனும் ஆசீர்வாதத்துடனும் புனித ஆஞளின் திருழா முடிவுற்றது.

செல்வன் டயஸ்
யாழ். வளாகம்

★

### நாஞட்டானில்

நாஞட்டான், வாழ்க்கைப் பெற்றுன் கண்டல் புனித நீக்கிலார் இளைஞர் கழகத்திஞல் 1989-08-06-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணியளவில் பங்குத் தந்தை அருட்திரு போல் நடசத்திரம், அ. ம. தி. அடிகள் அவர்களால் கிராமமக்களின் வளர்ச்சிக்காக ''அறிவகம்'' என்னும் நூலகம் திறந்துவைக்கப்பட்டது. அறிவகத்தின், செயற்பாடுகள். முக்கயத்துவம், வளர்ச்சிபற்றி பங்குத் தந்தை அவர்களால் உரை ஆற்றப்பட்டது. பின்பு செபத்துடன் வைபவம் நிறைவு பெற்றது.

இளைஞர் கழகச் செய்திப் பிரிவு,
வாழ்க்கைப் பெற்றுன் கண்டல்
நாஞட்டான்.

✱

### கண்டியில்

ஆனி மாதம் 18-ம் திகதி மறை ஆசிரியர் திரு. எஸ். ஈசாக், மூன்று உரைகள, யேசுவின் இரட்சணிய பணி—திருச்சபையின் பணி — பொதுநிலையினரின் பணி என்பன வழியாக பொதுநிலையினர் யார் எவ்வாறு அவர்களுடைய மும்பணி. குரு, ஆசிரிய, அரச பணியை திருச்சபையிலும் பொதுவாக எல்லா மக்களுடைய நன்மைக்காக சேவை நோக்கத்தோடு நிறைவேற்றலாமென்று தெளிவாக விளக்கிக் கூறினர்.

குழு ஆய்வுகள் மூலமாக பங்குபெற்றுக்கொண்ட முப்பது இளைஞரும் முதியோரும் தாங்கள் வாழும் சமுதாயத்திலும் பிரச்சனைகளிலும் இக்காலசட்டத்தில் எவ்வாறு விசுவாச வாழ்க்கையை நடத்தவும் சேவை செய்யவும் வேண்டுமென்று கற்றுக் கொள்ள முயற்சித்தார்கள்.

R. L. சவிரிமுத்து
மறையாசிரியர்

**எவர் சில்வர் தயாரிப்புகள்**

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவற்றிலும பார்க்க தரமாகவும். மலிவாகவும் தயாரிககப்பட்ட Rajz Brand தேவநற் கருணைப் பாத்திரம (Ciborium), இரசபாத்திரம் (Chalice), தேவநற் கருணைத் தட்டு, காணிக்கைப் பை, பீட அலங்கார விளககுகள, பூ சந்தனங்கள் தூண்டா மணி விளக்குகள், தேவநற் கருணைக் கூடு (Tabernacle) இன்னும் பற்பல. காட்சிஅறை:- S. A. தேவதாசன், சூராவத்தை, கனகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# 'சார்' புதிய தலைவர்

இந்திய கத்தோலிக்க அச்சக சங்கத்தின் செயலாளரான பிதா மார்சலீன் மொருயஸ் ''சார்'' செய்திஸ்தாபனத்தின் பொறுப்பாசிரியராகவும் ''எடிற்றெயிட்ஸ்'' ஸ்தாபனத்தின் இயக்குநராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த இரு ஆண்டுகளாக இவற்றிற்கு பொறுப்பாக இருந்த பிதா ஜோன் வள்ளமட்டத்திடமிருந்து இவர் இப் பதவிகளைப் பொறுப்பேற்கிறார்.

கேரள பல்கலைக் கழகத்தில் முதுமாணி பட்டம் பெற்ற பிதா மொருயஸ் எடிற்றெயிட்ஸ் நிறுவனத்தில் சில காலம் பணியாற்றி வந்துள்ளார். திருவனந்தபுரத்தைச் சேர்ந்த இவர் கார்மேல் துறவற சபையின் உறுப்பினராவார்.

தமிழ்நாடு கத்தோலிக்க அச்சக சங்கம் டாக்டர் வரதராஜன் தலைமையில் புதிய அலுவலர்களுக்கு பாராட்டுக் கூட்டம் நடத்தியபோது டாக்டர் ஆசா, திரு. லெயோ ஜோசவ், திரு புதியவன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

அத்துடன் வெளியேறும் தலைவர் பிதா ஜோண் வள்ளமட்டத்துக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

## கிறிஸ்துவைத் தேடுவோருக்கு ஒரு நடுநிலையம்

அஹ்மதாபாத் கத்தோலிக்க தகவல் நிலையம் கடந்த ஆண்டில் தொடர்ந்து தனது செயற்பாட்டை ஆற்றிவந்துள்ளதுஎன அதன் வருடாந்த அறிக்கையில் பிதா வேர்கீஸ் போல் கூறியுள்ளார்.

புதிய இயக்குநனரான பிதா தோமஸ் அல்போன்ஸ் தலைமையில் கிறிஸ்துவையும் திருச்சபையையும் பற்றிய தபால் மூல பாடங்கள் தொடர்ந்து நடைபெற்றன. ''கிறிஸ்து தர்மம்'' என்னும் குஜராத்தி நூல் இலவசமாக அளிக்கப்படும் என்று பத்திரிகையில் விளம்பரம் செய்ததன்பயனாக சுமார் 1500பேர் அந்நூலைக் கேட்டுப் பெற்றுக் கொண்டனர். நூற்றுக்கும் அதிகமானோர் தபால் மூலம் பாடங்களைப் பூர்த்தி செய்து இலவசமாக ஒரு புதிய ஏற்பாட்டையும் பாராட்டுக் கடிதங்களையும் பெற்றுக் கொண்டனர்.

மேற்கு ஜேர்மன் நிதி நிறுவனமான மிசியோ ஆக்கனின் உதவியோடு ஒரு நூல்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பொதுமக்களுக்கு, சிறம்பாக இளைஞர்களுக்குப் பயன்படக்கூடிய சுமார் நாலாயிரம் நூல்கள் உள்ளன. வேதாகமத்தைப் பற்றிய ஒரு தபால் மூலப் பாடநெறி இவ்வாண்டின் பிற்பகுதியில் தொடங்கப்பட இருக்கின்றது.

## உமேவகாவும், நோஹ் நாடக மரபும்

உமேவகா, சோபியா பல்கலைக் கழகத்தில் 1981-ம் ஆண்டு கலாசாரத்துறையில் பட்டம் பெற்றவர். அதன் பின்னரே அவர் நாடகத்துறையில் முழுக்கவனம் செலுத்தலானார். ஒரு கத்தோலிக்கரான இவர் நோஹ் நாடகமரபை திருவழிபாட்டில் இணைப்பது கருதியே தமது முதல் நாடகத்தை தயாரித்தார். ரோமாபுரியின் சூழ்நிலை, நடிகர்களின் உடல் அசைவுகள், குரல்வேறுபாடுகள் ஆகியவற்றுக்கு பொருத்தமாக அமையாத போதிலும் அதை மீண்டும் ஐரோப்பாவிலும், டோக்கியோவிலும் மேடையேற்ற உமேவகா ஆலோசித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் ஜப்பானிய நோஹ் மரபின்படி ''கிறிஸ்துவின் திருமுழுக்கை'' திருத் தந்தையின்முன்நடித்துக் காட்டிய உமேவகா நாவோ ஹிகோ என்னும் இளம் நடிகர் மேலும் பல கிறிஸ்தவ கருத்துக்களை இம்முறையில் தயாரித்தளிக்க எண்ணியுள்ளார். கிறிஸ்துவின் திருமுழுக்கைத் தயாரிப்பதற்கு இவருக்கு துணைபுரிந்தவர் யேசுசபைக் குருவான பிதா கடோவாகி ககிச்சி என்பவராவார்.

## மட்டுநகரில் வெள்ளி விழா

இறைவன் சேவையில் தம்மை அர்ப்பணித்த 25 ஆண்டுகளின் நிறைவை 1.7.1989 இல் அருள்சகோதரர் W. M. மைக்கல் S. S. J. அவர்களும், அருள்சகோதரர் S. P. கனீசியஸ் S. S. J. அவர்களும் மட்டக்களப்பில் உள்ள தமது சபைச்சிற்றாலயத்தில் பக்தி சிரத்தையுடன் கொண்டாடினர். விழாத்திருப்பலியை வண. பிதா. ஜோசவ் டி கொணிங் அடிகளார் நிறைவேற்றி அருள் உரைவழங்கினார்.

தேவஅழைத்தல் நலிந்து கொண்டு செல்லும் இக்கால கட்டத்தில் கிறிஸ்துவுக்குச் சாட்சிபகரும் இவ்இரு அருள் சகோதரர்களின் சேவையைப் பாராட்டுவதாகவும், ஏனைய இளைஞருக்குத் தேவஅழைத்தலுக்கான தூண்டுதலாகவும் இவ்விழா அமைந்தது.

தகவல்: S. ஜெறி.

# இளைஞர்களுக்காக உழைக்க வழிகாட்டிகளுக்கு அழைப்பு

மதுரை நொபிலி மேய்ப்புப் பணி நிலையத்தில் நடத்தப்பட்ட இளைஞர் வழி காட்டிகளுக்கான பயிற்சிநெறி ஒன்றில்பங்குபற்றியோர் தமது செயற்பாடுகளை விரிவுபடுத்தி. ஏழைகள், ஒடுக்கப்பட்டோரின் உயர்வுக்காகவும் விடுதலைக்காகவும் தமது சக்திகளையெல்லாம் பயன்படுத்தப் போவதாக உறுதிபூண்டனர்.

ஜுலை 7 முதல் 12 வரை ஆயர் பேரவையின் இளைஞர் ஆணைக்குழுவினால் நடத்தப்பட்ட இந்தக் கருத்தரங்கில் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து அறுபது பேர் பங்குபற்றினர்.

இளைஞர் ஆணைக்குழுவின் தலைவரான தூத்துக்குடி ஆயர் திரேசாநாதன் அமல்நாதர் ஆரம்பவுரை நிகழ்த்துகையில் கிறிஸ்துவின் அழைப்பையும் பணியையும் ஏற்று இளைஞருக்காக உழைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

மதுரை ஆயர் ஆரோக்கியசாமி தமது உரையில் இந்தியாவின் ஆயர் அனைவரும் தேசிய மட்டத்திலும், பிராந்திய மட்டத்திலும் இளைஞர் பணியில் அதிக கரிசனை கொண்டிருப்பதாகவும், தாம் இளைஞர் வழிகாட்டிகளின் கடின உழைப்பைப் பெரிதும் பாராட்டுவதாகவும் கூறினார்.

திரு. பிரான்ஸிஸ் குழுவினர் வரதட்சணைக் கொடுமையின் அநீதியை விளக்கும் தெருக்கூத்தொன்றை நடித்துக்காட்டினர். சமூகத்தில் நிலவும் தீமைகளை மக்களுக்கு உணர்த்த இத்தகைய தெருக்கூத்துகளை நடத்துமாறு இளைஞர் வழிகாட்டிகளுக்கு ஆலோசனை கூறப்பட்டது.

# "பாரகா" நிறுவனம்

## போதைப் பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வு நிலையம்

பங்களதேசத்திலுள்ள டாக்கா நகரில் கரிற்றாஸ் நிறுவனம் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் புனர்வாழ்வுக்காக ''பாரகா'' என்னும் ஓர் நிலையத்தைத்திறந்துள்ளது.

டாக்கா பேராயர் மைக்கல் ரோசாறியோ இந்நிலையத்தைத் திறந்துவைக்கையில் ஒரு பிள்ளையைத் தகுந்த முறையில் வளர்ப்பதற்குக் குடும்ப சூழ்நிலையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

பங்களதேஷ் கரிற்றாஸ் இயக்குநரான திரு ஜெவ்றி பெரேரா இந்நிலையம் கரிற்றாஸின் முக்கிய திட்டங்களுள் ஒன்று எனக் குறிப்பிட்டார்.

துணை இயக்குநரும் வைத்திய அதிகாரியுமான டாக்டர் தோமஸ் பாரோய் போதைப் பொருள் பாவனையின் விளைவுகளை அனுபவரீதியாக விளக்கி, அதற்கு அடிமைப்பட்டோரை மீட்பதில் குடும்பமே முதலிடம் எடுக்கவேண்டும் எனக் கூறினார்.

போதைப் பொருளின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்ட மூவர், இளைஞர் போதைப் பொருளை நாடுவதன் காரணங்களையும் அதனால் அவர்களுக்கு ஏற்படும் விளைவுகளையும் அனுபவரீதியாக விளக்கினர்.

இதுவரை 41 பேர் இந்நிலையத்தில் சிகிச்சை பெற்றுள்ளனர். தற்போது அங்கு ஐந்து முஸ்லீம்களும் ஏழு கத்தோலிக்கரும் சிகிச்சை பெறுகின்றனர்.

## திருப்பாலத்துவ சபை

சிறுவருக்கான கல்வி, சுகாதாரப் பணியை மேற்கொண்டு வரும் வத்திக்கானிலுள்ள திருப்பாலத்துவ சபை இவ்வாண்டு ஆசிய ஆபிரிக்க நாடுகளிலுள்ள 14 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு 3024 லட்சம் ரூபா (108 லட்சம் அமெ. டொலர்) ஒதுக்கியுள்ளது.

## யப்பான்

1988 கணக்கின்படி யப்பானில் 0. 34 வீதம் அதாவது 422, 304 கத்தோலிக்கர் உள்ளனர் என யப்பான் கத்தோலிக்க ஆயர் சங்கம் அறிவித்துள்ளது. அவர்களில் 167,397 ஆண்களும் 244,626 பெண்களும் அடங்குவர்.

## அன்னை திரேசா தாய்நாடு பயணம்

சென்ற திகட்கிழமை (ஆக. 14) அன்னை திரேசா கல்கத்தாவிலிருந்து தனது சொந்த நாடான அல்பானியாவுக்குச் சென்றார்.

தனது சொந்த நாட்டுக்குச் செல்ல வேண்டும் என்ற விருப்புடனும் தமது குடும்ப அங்கத்தவர்களின் கல்லறைகளைத் தரிசிக்கவும் திரானா என்னும் ஊருக்கு அன்னை சென்றதாக அல்பானியசெய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

### உருவாக்கல்

கிழக்காசிய இளைஞர் உருவாக்கல் இயக்கம் மாணவர் தலைவர்களுக்கான பயிற்சிப் பாசறையை ஜுலை 26 முதல் ஆகஸ்டு 5வரை தாய்வானில் நடத்தியது. ஹொங்கொங், ஜப்பான், தென் கொரியா, தாய்வான் ஆகிய நாடுகளில் இருந்து 44இளைஞர்கள் இந்த பதினொருநாள் நிகழ்ச்சிகளில் பங்குபற்றினர்.

### ஆயர்மன்ற செயலகம்

இந்திய கத். ஆயர்மன்றம், கோவாவில் தேசிய செயலகத்தை நிறுவியுள்ளது.

நூறு ஆயர்களைக்கொண்டலத்தீன்மரபு கத். திருச்சபை ஜுன்மாதம் 6-ம் திகதி கோவா மாநில தலைநகரில் தனது செயலகத்தை அமைத்துள்ளது.

### எண்பது வயதில்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

குருக்களைப்போல் திருப்பலி ஒப்புக்கொடுப்பதோடு பாவசங்கீர்த்தனம் கேட்பது ஞானஸ்நானம் கொடுப்பது அடக்கச் சடங்குகளை நிறைவேற்றுவது ஆகிய பணிகளை ஆற்றி வருகிறார். இவருக்கு பன்னிரு பேரப்பிள்ளைகளும் ஒரு பூட்டப்பிள்ளையும் உள்ளனர்.

### 3 அருள்தந்தையர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடக்க அனுப்பப்பட்டனர். ஜுலை 29ஆம் திகதி மூன்று தென் கொரிய குருக்கள் நாம், கூ, பாக் என்போர் கைது செய்யப்பட்டனர்.

## எழுத்தாளருக்கு அறிவுரை

பஞ்ஜிம் நகரிலுள்ள சமூக தொடர்பு நிலையத்தில் எழுத்தாளர், புகைப்படப்பிடிப்பாளர் பயிற்சிகளைப் பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக சமூகமளித்திருந்த உல்லாசப் பயணத்தொழில் அமைச்சர் டாக்டர் லூயிஸ் பார்போஸா உண்மைகளை அகச்சார்பின்றி வெளியிடும்படி அவர்களுக்கு அறிவுரை கூறினார். ஏனெனில் மிகக் கீழ்மட்டத்திலுள்ளவர்களுக்குக் கூட அறிவூட்டுவது தொடர்பு சாதனங்களே.

இம்முறை ஆறு மாதப் பயிற்சியை முடித்தோர் 21 பேர். இந்நிலையத்தின் ஆரம்பத்திலிருந்து, அதாவது 1980 லிருந்து இங்கு பயிற்சிபெற்றோர் 200 பேர்.

ஒரு வருட எழுத்தாளர் பயிற்சிநெறியும், புகைப்படப்பிடிப்பு, விளம்பரம், வானொலி நாடகம் எழுதுதல் பயிற்சிநெறியும் ஆரம்பிக்கவிருக்கிறது

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
பதிவுஇல: QB/ 1001/ 58/81

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னுடனிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org